

திருக்கோயில்
டிசம்பர்
2000
விலை
ரூபாய் ஐந்து





சென்னை மேற்கு மாம்பலம் அருள்மிகு பாஷ்யகார ஆதிசென்னகேசவப் பெருமாள் திருக்கோயிலில் உற்சவ வாகன மண்டபத் திறப்புவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இத்திறப்புவிழாவில் பங்கேற்று உற்சவ வாகன மண்டபத்தைத் திறந்து வைத்தார்கள். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., சைதை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு சைதை கா. கிட்டு, சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., சென்னை உதவி ஆணையாளர் திருமிகு அ. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2031 | விக்ரம ஆண்டு மார்கழி | மணி |
|---|---|---|---|
| 42 | | டிசம்பர் 2000 | 12 |


சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.
ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

**திருவண்ணாமலை அருள்மிகு உண்ணாமுலை அம்மை உடனுறை அருணாசலேஸ்வரர்**

## பொருளடக்கம்

முதல் பிறவி
- திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

நினைத்தாலே முத்தி வழங்கும் திருவண்ணாமலை
- முனைவர் த. அமிர்தலிங்கம்

கொடி மரம் - முனைவர் டி. செல்வராஜ்

தக்களை வள்ளியிமில் கொளும் தங்கருபள்
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

அன்பே சிவம் - பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

கவசத் திருநீறு - பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியன்

அழகன் அருள் - கவிஞர் ஆற்றலரசு

பொதட்டூர் வாழும் பெருமான் - கவிஞர் ச.க. ஏகாம்பரம்

நலம் தரும் எட்டெழுத்து மந்திரம்
- விஷ்ணுதாசன் எஸ். சுந்தரம்

எல்லாம் நாராயணனே - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

வள்ளுவர் முதலிடம் தரும் பண்பு
- புலவர் என்.டி. சிவலிங்கம்


வினாவும் விளக்கமும்
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

எது சரியான விடை - அ. நிறைமதி

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
**திருக்கோயில்**
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : 8279407

# முதல் பிறவி

- ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை.



1. பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நுண்ணுடலைக் கொடுத்தாய்
பெற்றோர்களைத் தோற்றுவித்துப் பருவுடலைக் கொடுத்தாய்
முதல் பெற்றோர்களுக்குத் தூலவுடல் கொடுத்தாய்
மூலவுடல் எடுத்து முதல்பிறவி கொடுத்தாய்.

2. போக வடிவினனாய் போகத்தைப் பயிற்றுவித்தாய்
மோக வலையில் சிக்கும்வண்ணம் வைத்தாய்
வேக வடிவினனாய் வினையை ஊட்டுவித்தாய்
வேகம் கெடுக்கும் விமலனாகவும் காட்டுவித்தாய்.

3. அள்ள அள்ளக் குறையாதாம் ஆருயிர்
அள்ளி அள்ளிக் கொடுப்பதாம் பேருயிர்
இரண்டும் இணைந்து விட்டால் ஓருயிர்
இணைவதற்குச் சரணடைய வேண்டுமாம் இன்னுயிர்.

4. உருதாங்கி குருவாகி அறிவிக்க வேண்டும்
உன்னருளாலே அறிவு தெளிந்திடல் வேண்டும்
சபலமின்றி சலனமின்றி இருந்திட வேண்டும்
அவலமின்றி ஆளாக உன்னருள் வேண்டும்.

5. விருப்பத்தைப் போக்கிட வினையேன் முயல்கின்றேன்
வெறுப்பை வெறுப்பதற்கு வேண்டியதைச் செய்கின்றேன்
வினையை ஒழித்திட விரதம் பூணுகின்றேன்
வெற்றியைத் தந்திட உன்னருளைக் கேட்கின்றேன்.

★ ★ ★

# நினைத்தாலே முத்தி வழங்கும் திருவண்ணாமலை

- முனைவர் த. அமிர்தலிங்கம்

''ஆணவ அழுக்கு அடையும் ஆவியை விளக்கி
அனுபூதி அடைவித்ததொரு பார்வைக்காரன்''

என்று முருகப்பெருமான் ஆணவ மலத்தை இறைவன் - முருகனே ஒரு பார்வையில் அடக்கி அனுபூதி நிலையை மெய்யன்பர்களுக்கு வழங்கி அருளுவான் என்று தாம் பாடியுள்ள ''வேளைக் காரன் வகுப்பு'' நூலில் தெளிவு படுத்தியிருக்கக் காணுகின்றோம்.

ஆணவம் பல்வேறு காரணங்களால் உயிர்களிடம் தலைதூக்கி நிற்கின்றன என்றபோதும் அவற்றில் முக்கிய காரணங்களாகத் திகழ்வன செல்வமுடைமையும், கல்வியுடைமையும் ஆகும். செல்வத்திற்கு அதிபதியாகத் திகழும் திருமாலும், கல்விக்கு அதிபதியாகத் திகழும் நான்முகனும் ''தாமே பெரியவர்'' என ஆணவம் கொண்டு தர்க்கமிட்டுத் திரிந்த போது, அவர்களுக்கு மெய்யறிவு கொளுத்தும் வகையில் பரம்பொருளான சிவபெருமான் ''ஆதி அந்தமில்லாத அருட்பெருஞ் சோதி''யாக வானுற வோங்கி வளர்ந்து நின்றார். அந்த ஜோதியின் அடியையோ, முடியையோ யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்றும் இறையவர் திருவாய்மலர்ந்து அருளினார்.

''பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப் பொருள்
முடிவே''

என்பது திருவெம்பாவை.

மகாவிட்டுணு இறைவரின் அடிகாண வராக மாய் தோற்றம் கொண்டு, பாதாளங்களை ஊடுருவிச் சென்றார். அன்னப் பறவையின் வடிவம் கொண்டு இறைவரின் முடி காண பிரம்மா வானில் பறந்து சென்றார்.

அடிகாண முயன்ற வராகமூர்த்தி பாதாளம் ஏழினும்கீழ் ஊடுருவிச் சென்று முயன்ற போதும் அடிகாண இயலவில்லை. அடிகாண இயலவில்லை என்பதைத் திருமால் இறைவரிடம் கூறித் தம் தோல்வியை ஒப்புக் கொண்டு சிவபெருமானே பரம்பொருள் என்பதை ஏற்றுக் கொண்டார். ஆனால் முடிகாண அன்னப் பறவையாய் வான்மேல் பறந்து சென்ற பிரம்மாவோ தம் தோல்வியை ஒத்துக் கொள்ளாமல், தலைகீழாகப் பறந்து கீழ் நோக்கி வந்து கொண்டிருந்த தாழம்பூவிடம் ''நீ இறைவனார் முடியை யான் கண்டுவிட்டதாக எனக்குப் பொய்சாட்சிபகர்'' எனக் கூறித் தாம் முடியைக் கண்டதாக வந்து இறைவரிடம் உறுதிபடக் கூறி இன்று ''தமக்கு சாட்சி தாழம்பூ'' எனவும் கூறினார்.

இறைவனிடமே பொய் கூற முற்பட்ட பிரம்மாவை பூலோகத்தில் மானிடனாய்ப் பிறக்க சபித்த இறைவர், தாழம்பூ பொய்சாட்சி கூற முற்பட்டபடியால் தம் பூசைக்கு உரிய மலராகாது எனவும் இறைவர் தாழம்பூவைத் தள்ளி வைத்தார்.

தம் தோல்வியை ஒத்துக் கொண்டு சிவபெருமானைப் பரம்பொருள் எனத் தெளிந்து கொண்ட திருமாலுக்குத் தம் அடியையும் முடியையும் காட்டும் வண்ணம் அழல் உருவில் இருந்த சிவபெருமான் மலை உருவில் குறுகி நின்றார். அப்படிப் பொங்கழல் உருவனாக இருந்த இறைவர் அண்ணாமலையாக மாறி நின்ற திருத்தலமே கார்த்திகைத் தீபத் திருவிழாவால் சிறப்புப் பெறும் திருவண்ணாமலை திருத்தலம் ஆகும்.

மும்மூர்த்திகளில் ஒருவர் அல்லர் சிவபெருமான்; அவர் திருமால், நான்முகனுக்குத் தலைவர் என்பதை மேற்காட்டிய வரலாறு தெளிவுபடுத்தும். இதனை திருவருணைக் கலம்பகம் எனும் நூல்

''யாதவர் குலத்து நெடு மாதவன் மருப்புடைய
ஏனமிருகத்து உருவமாய்
வேதமொழி பெற்ற அயன் ஓதிமம் எனப் பறவை
வேடமும் எடுத்த திலையோ?

ஓதருணை வித்தகரை மூவரில் ஒருத்தரென
ஓதியிடும் அற்ப மதியீர்!
சீதமதி வைத்த முடி பாதமலரைச் சிறிது
தேடுதல் நினைத்த பரமே''

என்று தெளிவுபடப் பாடியிருக்கக் காணலாம்.

"ஆதிநெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை - வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணா மலை''

என்று பாடுகின்றது அண்ணாமலை வெண்பா.

திருவாரூர் திருத்தலத்தில் பிறக்க முத்தி என்றும், காசி திருத்தலத்தில் இறக்க முத்தி என்றும், சிதம்பரம் திருத்தலத்தில் வழிபாடு செய்ய முத்தி என்றும், திருவண்ணாமலை திருத்தலத்தை நினைக்கவே முத்தி தரும் திருத்தலம் என்றும் நம் ஆன்றோர்கள் கூறுவர். திருவண்ணாமலையை நினைக்கும் போதே நம்முடைய செல்வச் செருக்கும், கல்விச் செருக்கும், பிறவற்றால் உண்டாகும் செருக்குகளும் செத்தொழிந்து ''யாவும் பரம்பொருளின் பேரருள்'' என்ற ஞானநிலை உண்டாகி விடுவதால் திருவண்ணாமலையை நினைக்கும் போதே முத்திப் பேறு பெறுவதற்குத் தகுதி பெற்றவர்களாக நாம் ஆகிவிடுதல் உண்மை. ஆகவே தான் ''திருவண்ணாமலையை நினைக்கவே முத்தி'' என்று ஆன்றோர்கள் கூறியிருக்கக் காண்கின்றோம்.

''உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ஆர்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா
வண்ணம் அறுமே''

என்று திருவண்ணாமலையைத் தொழும் அடியார்கள் வினைகள் தீர்ந்து போவது திண்ணம் என்கின்றார் திருஞானசம்பந்தர்.

''தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம் நமது உள்ள வினைகளே''

என்று வினைகள் யாவும் தீர, அண்ணாமலையைக் கை தொழுது ஆடிப்பாடிப் போற்றுதல் வேண்டும் என்கின்றார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

அன்று முதல் இன்று வரை எண்ணற்ற ஞானத்தபோதனர்கள் வீற்றிருந்து அருளும் திருத்தலம் திருவண்ணாமலை திருத்தலம் ஆகும். திருவண்ணாமலையை நினைந்துருகிப் போற்றிடாத ஞானத் தபோதனர்களே இல்லை எனலாம்.

ஞானத் தபோதனரை வாவா என்று அழைக்கும் மலை அண்ணாமலை என்பதைத் ''திருவண்ணாமலை வெண்பா''வில் குருநமச்சிவாயர்

"ஆதிநடம் ஆடுமலை அன்றிருவர் தேடுமலை
சோதிமதி ஆடரவம் சூடுமலை - நீதி
தழைக்குமலை ஞானத் தபோதனரை வாஎன்று
அழைக்குமலை அண்ணா மலை''

என்று பாடிப்போற்றியிருக்கக் காணுகின்றோம்.

மக்கள் வாழ்விற்கு ஆதாரமான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றைப் பஞ்சபூதங்கள் என்பர். இப்பஞ்சபூதங்களால் சிறப்புப் பெறும் திருத்தலங்கள் பஞ்சபூதத்தலங்கள் என வழங்கப் பெறும்.

திருவாரூரும், காஞ்சியும் பஞ்சபூதங்களில் நிலத்திற்குரியன; திருவானைக்கா நீருக்கு உரியது; திருக்காளத்தி காற்றிற்குரியது; சிதம்பரம் ஆகாயத்திற்குரியது; திருவண்ணாமலை திருத்தலமே நெருப்புக்குரிய திருத்தலம் ஆகும்.

சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம் ஆதலால் திருவண்ணாமலை - நெருப்புக்குரிய தலமாகத் திகழும் பெருமை பெற்று விளங்குகின்றது. நிலநூல் ஆய்வறிஞர்கள் திருவண்ணாமலை திருத்தலத்தை ஆய்ந்து இங்குள்ள மலை நெருப்புத்தன்மை வாய்ந்து (Igneous Rock) என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆதி அந்தமில்லாத அருட்பெருஞ்சோதியாக இத்திருத்தலத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிறப்பின் காரணமாகவே, இத்திருவண்ணாமலை திருத்தலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ''கார்த்திகைத் தீபவிழா'' மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கார்த்திகைத் தீபவிழா பன்னெடுங்காலமாக நம் தமிழ்த் திருநாட்டில் கொண்டாடப்பட்டு வரும் ஒப்பற்ற விழா என்பதற்கு நம் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. ஔவையாரும், நக்கீரரும், பாலை பாடிய பெருங்கடுங்கோவும் கார்த்திகைத் தீப விழாவினை ''அகநானூறு'' ''நற்றிணை'' ஆகிய எட்டுத் தொகை நூலில் உவமையில் வைத்துச் சிறப்பித்து உள்ளனர். முத்தொள்ளாயிரம், பழமொழி நானூறு, களவழி நாற்பது, சீவக சிந்தாமணி ஆகிய பழந்தமிழ் நூல்களிலும் இவ்விழா பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

கார்த்திகைத் தீப விழாவின் இத்தகைய தொன்மைச் சிறப்பை உணர்ந்தே திருஞானசம்பந்தரும் ''தொல் கார்த்திகை நாள்'' என்று இவ்விழாவின் சிறப்பினைக் காட்டி

''வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்''

என்று பாடியிருக்கக் காணலாம்.

சிவபெருமான் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய்த் திகழ்பவர். ஒளிகளுக்கு எல்லாம் மூல காரணர். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய ஒளிப் பொருள் அனைத்தும் இறைவனிடமிருந்தே ஒளியைப் பெறுகின்றன.

''சோதியே, சுடரே! சூழ்ஒளி விளக்கே''

எனத் திருவாசகமும்

''ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே''

எனத் திருவிசைப்பாவும், இறைவன் ஒளிமயமானவன் என்பதைக் கூறுகின்றன.

இறைவரின் கண்களை உமாதேவி விளையாட்டாகப் பொத்திய காரணத்தால் உலகெங்கும் இருள் சூழ்ந்தது. அம்பிகை அஞ்சித் தம்கையை அகற்ற உலகம் ஒளிமயமானது. இதனைச் சிவஞான சித்தியார் எனும் நூல்

''நாயகன் கண்ந யப்பால்
நாயகி புதைப்ப எங்கும்
பாய்இருள் ஆகி மூடப்
பரிந்துல கினுக்கு நெற்றித்
தூய நேத்திரத் தினாலே
சுடர்ஒளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகள் எல்லாம்
சிவன் ஒருத்தனே ஆகும்''

எனத் தெளிவுபடுத்திடக் காண்கின்றோம்.

இவ்வாறு பேரொளிப் பிழம்பாகத் திகழும் இறைவனின் பெருமையைக் கொண்டாடிப் போற்றும் வகையிலேயே கார்த்திகைத் தீப விழா தொன்று தொட்டு நம் ஞாலமக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியாக இறைவன் திருவண்ணாமலையில் தோன்றிய படியால் திருவண்ணாமலை திருத்தலத்திற்குப் பெருமை சேர்க்கும் ஒப்பற்ற விழாவாகக் கார்த்திகைத் தீபவிழா திகழ்ந்து வருகின்றது.

இத்தகைய ஒப்பற்ற தீப விழாவைத் திருவண்ணாமலையில் தரிசித்தால், தீபம் கண்ட அடியார்களின் இருபத்தியொரு தலைமுறை இன்புற்றுத் தழைக்கும் என்பதைப் பின்வரும் திருவண்ணாமலை தலபுராணப்பாடல் கூறுகின்றது. அப்போற்றரும் பாடல் பின்வருமாறு.

''கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒரு சோதி
மலைமீது காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர்காணில் பசிப்பிணி இல்
வாது உலகில் மன்னி வாழ்வார்
பார்த்திபர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும் இது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலை முறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்.''

திருவண்ணாமலை கார்த்திகைத் தீபத்தைச் சிறப்பித்துக் ''கார்த்திகைத் தீப வெண்பா'' என்ற ஒப்பற்ற நூலை அருளியுள்ளார் சோணாசல பாரதியார். 100 பாடல்கள் உள்ள அந்நூலிலிருந்து ஓரிரு வெண்பாக்களை இங்குக் காணலாம்.

''இன்பமத ருதீபம் ஏத்திப் பணிந்தோர்கள்
துன்பஇருள் ஓட்டும் சுடர்த்தீபம் - அன்பர்
அவமறுக்கும் தீபம் அருமைவளர் தீபம்
பவமறுக்கும் கார்த்திகைத் தீபம்''

''பந்தத் தொடக்கைப் பரிகரிக்கும் தீபநிதம்
வந்தடியேன் உள்ளம் வதிதீபம் - இந்தத்
தரணிபணி சோணா சலமுடியின் நல்ல
பரணிவரு கார்த்திகைத் தீபம்.''

புத்திதருந் தீபநல்ல புத்திரசம் பத்துமுதல்
சித்திதருந் தீபஞ் சிவ தீபம் - சத்திக்கு
உயிராகும் சோணமலை ஓங்கிவளர் ஞானப்
பயிராகும் கார்த்திகைத் தீபம்''

சிவப்பிரகாசசுவாமிகள் தாம் பாடியருளியுள்ள ''சோணசைல மாலை'' எனும் நூலில் கார்த்திகைத் தீபத்தைப் பிறவியாகிய கரை ஏற மெய்யடியார்களுக்கு அருள்புரியும் கலங்கரைத் தீபம் எனச் சிறப்பித்திருப்பது இங்குநாம் நினைவில் கொள்ள வேண்டிய அற்புதக் கருத்தாகும்.

''பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே''

இத்தகைய மகிமை மிகுந்த கார்த்திகைத் தீபத் திருவிழா வரும் 9.12.2000 அன்று மிகச் சிறப்புற நிகழவுள்ளது. இவ்விழாவினைக் கண்டு களிப்புற்றுப் பிறவியாகிய கரை ஏறி இறைவன் திருவடியில் வீற்றிருந்து இன்புறுவோமாக!

★★★

# கொடி மரம்

– முனைவர் டி. செல்வராஜ்

## கொடி நிலை

தொல்காப்பியம் என்பது மிகப்பழைய தமிழ் இலக்கண நூல். இது 1. கொடி நிலை 2. கந்தழி 3. வள்ளி என்ற கடவுள் வழிபாட்டின் மூன்று வகைகளைக் கூறுகின்றது. இவை எந்த வகையான வழிபாடுகள் என்பதும், எந்தத் தெய்வங்களை வழிபடுகின்ற வழி பாடு என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இவை மூன்றையும் பலர் பலவாறு விளக்குகின்றனர். கந்தழி, வள்ளி என்பன பற்றி இங்குக்காணாமல் 'கொடி நிலை' என்ற ஒன்றைப் பற்றி மட்டும் காணலாம்.

'கொடி நிலை' என்பது கொடி மரத்தை வழி படுகின்ற ஒரு வகை வழிபாடு ஆகும். காலத்தால் பழமையான வழிபாடுகளில் கொடிமர வழிபாடும் ஒன்று. இந்த வழிபாட்டைக் 'கொடி நிலை' எனக் குறித்தது தொல்காப்பியம் என்பது ஒரு கருத்து.

## பலவகைக் கொடிகள்

பழங்காலத்தில் அலங்காரத்திற்காகப் பல கொடிகள் பறந்தன. இவை ''அலங்காரக் கொடிகள்.''

அரசர்களுக்குரியன ''அடையாளக் கொடி கள்.'' இவற்றில் அரசர்களுக்குரிய தனித்தனி இலச் சினைகள் வரையப்பட்டன. மீன் - பாண்டியனின் இலச்சினை முதலியன.

அரசர்களுக்குரிய உபச்சாரங்களில் பல, தெய்வங்களுக்கும் உரியன. அரசர்களுக்குத் தனித் தனி கொடிகள் இருந்ததைப்போலத் தெய்வங்க ளுக்கும் தனித்தனி கொடிகள் இருந்தன. இவை ''ஆன்மீகக் கொடிகள்.''

சிவன் - இடபக்கொடி; திருமால் - கருடக் கொடி; முருகன் - மயில் கொடி; சேவல் கொடி. பொதுவாக, தெய்வங்களின் வாகனங்களே, அவர் களது கொடிகளின் இலச்சினைகளாகவும் விளங்கின.

முன்னர், தெய்வங்களின் கோயில்களில், அவ ரவருக்குரிய கொடிகள் ஏற்றப்பட்டன. அவை கம்பீர மாகப்பறந்தன. குறிப்பிட்ட கோயிலில் பறக்கின்ற கொடியைப்பார்த்தே அக்கோயில் இத்தெய்வத்தின் கோயில் என்று அடியார்கள் எளிதில் அறிந்தனர். இதற்காகவே கோயில்களில் கொடிகள் ஏற்றப்பட்டன.

கோயிலில் கொடியை ஏற்றவும், பறக்கவிட வும் கொடி மரம் நாட்டப்பட்டிருந்தது. பிற்காலங் களில் ஆலயங்கள் பிரம்மாண்டமாக வளர்ச்சி பெற்ற போது, கொடிமரம் ஆலயத்தின் ஒரு மிக முக்கிய மான உறுப்பாக நிலைத்தது. இக்கொடி மரத்தைப் பற்றி இனிக்காண்போம்.

இருப்பிடம் : பலிபீடத்திற்கும், வாகனத்திற் கும் நடுவில் இருப்பது கொடிமரம். எல்லாப் பெரிய ஆலயங்களிலும் கொடிமரம் உள்ளது. மிகச்சில ஆலயங்களில் இரண்டு கொடி மரங்கள் இருக்கின்றன.

## மரவகைகள்

தரமான, தகுதியான மரவகைகளால் கொடி மரத்தைச் செய்ய வேண்டும். கொடி மரம் ஒரே மரத் தால், இணைப்பில்லாமல் செய்யப்படுவது சிறந்தது. கொடி மரம் செய்யத்தகுதியான மரங்கள் :

1. உத்தமம் - சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழம் முதலியன.
2. மத்திமம் - மா, பலா முதலியன.
3. அதமம் - தென்னை, பனை, கமுகு, மூங்கில் முதலியன.

இலுப்பை மரத்தையும் கொடி மரமாகப் பயன்படுத்தலாம்.

கொடி மரம் எந்த மரத்தால் செய்யப்பட்டா லும், அது வெயில், காற்று, மழை, புயல், இடி முதலிய பல வகையான இயற்கைத் தாக்குதல் களைத் தாங்கக் கூடிய பேராற்றல்களைப் பெற்றிருக்க வேண்டும். சந்தனம் முதலான உத்தம மரங்கள் 'வைரமுடையவை' என்பதால், இவை கொடி மரம் செய்வதற்கு மிகத்தகுதி வாய்ந்தவை.

## கொடி மரக்கவசம்

கொடிமரம் நிலைத்து இருக்க வேண்டும் என் பதற்காக அதற்குப் பித்தளைக்கவசம் அமைக்கப்படு

# முத்தி வழங்குமலை
# அண்ணாமலை

ஆதி நெடுமால்
அயன்காண அன்று பரஞ்
சோதி செழுஞ் சுடராய்த்
தோன்றுமலை - வேதம்
முழங்குமலை சிந்திப்பார்
முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணா மலை

- அண்ணாமலை வெண்பா.

கிறது. பித்தளைக்கவசம் கொடிமரத்திற்கு மிகச் சிறந்த பாதுகாப்பு. இயற்கைத் தாக்குதல்களைப் பித்தளைக்கவசம் தாங்கிக்கொண்டு, கொடி மரம் நலியாமல் காக்கின்றது.

பித்தளைக் கவசமே கொடி மரத்திற்கு ஒரு கம்பீரத்தையும், பேராற்றலையும், பொலிவையும் சிறப்பாகத் தருகின்றது. ஆகவே, கொடிமரத்துக்குக் கவசம் முக்கியம்.

பித்தளையால் கொடி மரக்கவசத்தைச் செய்யலாம்; ஆனால், கொடி மரத்தையே செய்கின்ற வழக்கமில்லை; உலோகத்தால், உள்ளீடற்ற கொடி மரத்தையும் செய்வதில்லை. கொடிமரம் - பெயருக்குத் தகுந்தபடி எப்போதும் மரத்தால் செய்யப்படுவதே மரபாகும். அதைப் பித்தளைக்கவசத்தால் மூடுவதே பொருத்தமாகும். உலோகத்தால் செய்யப்பட்ட கொடிமரம் ஒன்றைப் பற்றிப் பின்னர்க் காண்போம்.

## கொடி மரத்தின் உயரம்

கருவறையின் மதிள் சுவரின் மட்டம் வரை - அதாவது வியாள மட்டம் வரை - கொடி மரம் உயர்ந்திருப்பது முறை.

அல்லது, விமானத்தில் அமைந்த ஒவ்வொரு நிலைமட்டம் வரையிலும், அல்லது கலச மட்டம் வரையிலும் கொடிமரத்தின் உயரம் இருக்கலாம். கலச மட்டத்தை விடக் கொடிமரம் உயர்ந்திருக்கக் கூடாது.

கொடி மரத்தின் மொத்த உயரத்தில் ஐந்தில் ஒரு பங்கு நிலத்தில் ஆழமாகவும், அழுத்தமாகவும் பதியும்படி கொடி மரத்தை அசையாமலும், ஆடாமலும் நிலைநிறுத்த வேண்டும்.

கோபுரத்தை விட விமானமும், விமானத்தை விடக் கொடி மரமும் உயரத்தால் குறைந்தவை. இவை மூன்றையும் தரிசிக்க வேண்டும்.

## ஊனுடம்பு ஆலயம் : ஆலயத்தில் கொடிமரம் :

''உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்'' என்பது திருமூலரது தவமொழி. ஊனுடம்பை ஒரு முன்மாதிரியாக வைத்து ஆலயமும், கோபுரமும் வடிவமைக்கப்பட்டன. மனித உடம்பின் உறுப்புகளும், ஆலயத்தின் உறுப்புகளும் இணைகின்ற முறைகள் சில வருமாறு:-

1. பாதம் - கோபுரம்
2. தொப்புள் - பலிபீடம்
3. முதுகுதண்டு - கொடிமரம்
4. மார்பு - மகா மண்டபம்
5. முகம் - அர்த்த மண்டபம்
6. தலை - கருவறை
7. தலையுச்சி - விமானம்
8. புருவநடு - மகாலிங்கம்.

ஊனுடம்பு ஆலயமானால், முதுகுதண்டு கொடி மரம் ஆகும். முதுகு தண்டில் முப்பத்திரண்டு எலும்பு கணுக்கள் இருப்பதைப்போல, கொடி மரத்திலும் முப்பதிரண்டு வளையக்கட்டுகள் இருக்கின்றன. வளையக்கட்டுகள் முப்பத்துமூன்று இருப்பது உத்தமம் என்பர்.

## ''ஊனுடம்பு ஆலயம்'' - வேறொரு விளக்கம்:-

1. வாய் - கோபுர வாசல்
2. நாக்கு - நந்தி
3. உள்நாக்கு - கொடிமரம்
4. ஐம் பொறிகள் - விளக்குகள்
5. உள்ளம் - கருவறை
6. உயிர் - மகாலிங்கம்

இந்த விளக்கத்தில், உள்நாக்கைப் போன்றது கொடிமரம் என்று விளக்கப்பட்டது. இவற்றால்

கொடிமரம் ஆலயத்தின் முக்கிய உறுப்பாக மதிக்கப் படுகிறது என்பது புலனாகிறது.

## லிங்கமும் கொடிமரமும்

ஆலயங்களில் ஐந்து வகைப்பட்ட லிங்கங்கள் உள்ளன. ஆலயத்தின் மிக முக்கியமான உறுப்புகள் அனைத்தும் லிங்கங்களாகவே போற்றப்படுகின்றன. அவை வருமாறு:-

1. கோபுரம் - தூல லிங்கம்
2. கருவறை - சூட்சம லிங்கம்
3. பலிபீடம் - அதி சூட்சம லிங்கம்
4. கொடிமரம் - காரண லிங்கம்
5. மூலலிங்கம் - மகா காரண லிங்கம்

கொடி மரத்தைச் ''சூட்சம லிங்கம்'' என்பது மற்றொரு கருத்து. ஆகவே, கொடி மரம் என்பது ஒருவகை லிங்கம்.

## அமைப்பு

லிங்கமும், கொடி மரமும் ஒரே அமைப்புடையன. இவற்றின் (1) அடிப்பாகம் - சதுரம் - பிரம பாகம் - படைத்தல் (2) இடைப்பாகம் - எண்கோணப் பட்டைகள் விஷ்ணு பாகம் - காத்தல் (3) உருண்டு நீண்ட பாகம் (பாணம்) - உருத்திரன் - அழித்தல்.

எனவே, கொடி மரம் என்பது மிக மிக நீண்ட பாணத்தைக் கொண்ட லிங்கம் என்றும் குறிக்கத் தக்கது. ஆகவே, மூல லிங்கத்திற்குச் செய்யப்படுகின்ற அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தீப ஆராதனை முதலியன அனைத்தும் கொடி மரத்திற்கும் செய்ய வேண்டும் என்பது விதி.

லிங்கத்திலும், கொடி மரத்திலும் முப்பெருந் தெய்வங்களும் வீற்றிருந்து முப்பெரும் தொழில்களை நிகழ்த்துவதால், லிங்கத்திற்குரிய மகிமைகள் அனைத்தும் கொடி மரத்துக்கும் உள்ளன. ஒரு லிங்கத்தை வழிபடுவதைப் போலவே கொடி மரத்தையும் வழிபட வேண்டும்.

## கொடி மரத்தை ஏன் வழிபட வேண்டும்?

1. கொடி மரம் என்பது ஆலயத்தின் முக்கியமான ஓர் உறுப்பு.
2. கொடி மரம் என்பது ஒரு வகை லிங்கம்.
3. கொடி மரத்தில் முப்பெருந்தெய்வங்கள் உறைகின்றனர்.
4. கொடி மரத்தின் சதுரப்பக்கங்களில் தெய்வ வடிவங்கள் வார்க்கப்படுவது உண்டு.
5. திருவிழாவின் தொடக்கத்திலும், முடிவிலும் கொடி மரத்துக்குச் சிறப்பான பூசைகளும், வழிபாடுகளும் நிகழ்கின்றன. அப்போது, கொடிமரத்தைத் தரிசிப்பதும், வணங்குவதும், வழிபடுவதும் மிக, மிக, மிக நல்லது.
6. கொடியுடன் கூடிய கொடி மரத்தைத் திருவிழாக் காலங்களில் மட்டுமே தரிசிக்க முடியும். அப்போது கொடிமரத்தை வழிபட்டால் கிடைக்கின்ற பலன்கள் பலவாம்.

மேற்கண்ட காரணங்களால் கொடிமரம் வழிபாட்டுக்குரியது என்பது தெளிவாகின்றது.

## கொடி மரத்தின் தேவை

கொடி மரத்தின் உச்சியிலுள்ள - மரக்கொடி ஒன்று பறப்பதைப்போன்ற அமைப்புடைய - மூன்று அடுக்கு நிலைகள் எப்போதும் மூலவரைச் சுட்டியபடி இருக்கின்றன. மூலவர் இருக்கின்ற திசையையும், இடத்தையும் துல்லியமாகக் காட்டுகின்றது கொடிமரம்.

மிகப் பெரிய ஆலயங்களில் மூலவர் சன்னிதியை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. உதாரணமாக, காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்குள் நுழைந்துவிட்டால் திசைகளை அறிய முடியாது. திசை மயக்கம் ஏற்படும். திசை மயக்கம் ஏற்படும்படி வடிவமைத்துக்கட்டப்பட்ட கோயில் இது ஒன்றுதான். இத்தகைய சூழ்நிலையில் மூலவர் சன்னிதி இருக்கின்ற இடத்தை அறியக் கொடிமரம் ஓரளவு துணை செய்யக்கூடியதாம்.

திருவிழாக் காலங்களில் கொடியேற்றக் கொடிமரம் தேவை என்பதை யாவரும் அறிவர்.

ஏதோ ஒரு காரணத்தால் கொடிமரம் இடையில் முறிந்து விழுவது அமங்கலம்.

காலப்பழமையாலும், இயற்கைத்தாக்குதல்களாலும் நலிந்த கொடிமரம் முறியாமல், முழுவதும் சாய்ந்துவிடுவதும் உண்டு. உடனே, வேறு கொடிமரம் ஒன்று, புதியதாக, விதிப்படி நாட்டப்பட வேண்டும். பழைய, விழுந்த கொடிமரத்தைப் பழுது பார்த்து மீண்டும் நடுவது தவறு. அவ்வாறு செய்யவும் மாட்டார்கள்.

கோயிலில் கொடிமரம் விழுந்துவிட்டால், புதிய கொடிமரம் நடப்படும் வரை, அங்கே திரு விழாக்கள் நடைபெறுவதில்லை. இவை சிறப்பாக நடைபெற வேண்டும் என்றால் கொடிமரம் நிச்சயம் தேவை. இதனால் கொடிமரத்தின் சிறப்பினை நன்கு உணரலாம்.

### வழிபாட்டில் கொடிமரம்

அடியார்கள் தினமும் ஆலய வழிபாடு செய்கின்றனர். அப்போது சில வழிபாட்டு முறைகள் கொடி மரத்தைச் சார்ந்தே நடைபெறுகின்றன.

கோயிலின் சுற்றுப்புற மதிள் அக்கோயிலின் புற எல்லை. அதன் அக எல்லை கொடிமரம். ஆலய வழிபாட்டின் தொடக்க இடமும் இதுவே.

எல்லாத்திய எண்ணங்களையும் பலி பீடத்தில் பலி கொடுத்துவிட வேண்டும். அப்போது உள்ளம் வெள்ளைத்தூய்மையாகிறது. அதில் பக்தி உணர்வுகள் பெருகி வழிகின்றன. இறை வழிபாட்டிற்குரிய பக்குவ நிலையை உள்ளம் அடைகின்றது.

தொடர்ந்து, கொடி மரத்தை நோக்கிச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியவுடன் ஆலய வழிபாடும் தொடங்குகிறது.

கோயிலில் கொடி மரத்தை நோக்கி, கொடி மரத்தருகில் விழுந்து வணங்கலாம். வேறு எங்கும் விழுந்து வணங்கக்கூடாது.

விழுந்து வணங்கும்போதும், உட்காரும் போதும் கொடி மரத்தை நோக்கிக் கால்களை நீட்டக் கூடாது.

பிரகாரத்தில் வலம் வரும்போது, வாகனத்திற்கும் மூலவருக்கும் நடுவில் நடக்கக்கூடாது. வாகனம் - கொடிமரம் - பலிபீடம் ஆகிய மூன்றும் உள்ளடங்கும்படி மூலவரை வலம் வருவதே முறை.

முடிந்த வரையில், கொடி மரத்தின் நிழலை மிதிக்கக்கூடாது; தாண்டக்கூடாது. அந்த நிழலில் உட்கார்ந்து ஓய்வெடுக்கக்கூடாது.

கொடிமரத்தைப்பற்றிச் சுழலவும், அதில் ஏறவும் குழந்தைகளையும், சிறுவர்களையும் அனுமதிக்கக்கூடாது.

ஆலய வழிபாடு நடைபெறுகின்ற போது கொடிமரம் ஒரு 'லிங்க மூர்த்தம்' என்பதை எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும்.

துவாரகபாலர் - விநாயகர் - முருகர் - மற்ற பரிவாரத் தெய்வங்கள் - மூலவர் - சண்டேசுவரர் என்ற இவர்களை முறையாக வழிபட்டவுடன் சிவ வழிபாடு முற்றுப்பெறுகிறது. ''சிவ வழிபாடு, பிள்ளையார் குட்டுடன் தொடங்கி, சண்டேசுவரர் கொட்டுடன் முடிவடைகிறது'' என்பது பழமொழி.

கொடிமரத்தருகில், இரண்டாம் முறையாக, விழுந்து வணங்கும் போது சிவாலய வழிபாடு முழுமை பெற்று, முற்றுப் பெறுகிறது.

எனவே, ஆலய வழிபாட்டின் தொடக்கத்திலும், முடிவிலும், வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரிய ஒரு மூர்த்தமாகவே கொடிமரம் திகழ்வதைக் காணலாம்.

### கொடி மரத்தருகில் விழுந்து வணங்கக்கூடிய திசைகள்

| | |
|---|---|
| கிழக்கு, மேற்கு நோக்கிய மூலவர் சன்னிதி | வடக்கே தலைவைத்து விழுந்து வணங்க வேண்டும். |
| தெற்கு, வடக்கு நோக்கிய மூலவர் சன்னிதி | கிழக்கே தலை வைத்து விழுந்து வணங்க வேண்டும். |

விழுந்து வணங்கும்போது, புண்ணியத் திசைகளான வடக்கு அல்லது கிழக்கு நோக்கியே தலை வைத்து வணங்க வேண்டும். தெற்கு அல்லது மேற்கு நோக்கித்தலை வைத்து வணங்கக்கூடாது. இவ்வாறு வணங்கினால், ஏதேனும் ஒரு மூர்த்தத்தை நோக்கிக் கால்களை நீட்டக்கூடிய தவறான சூழ்நிலை ஏற்படும்.

மேற்கண்டவாறு ஆலய வழிபாடு முடிந்ததும் கொடிமரத்தருகில், வடக்கு நோக்கி அமர்ந்து, மந்திரங்களைக் கூறியும், பாடல்களைப் பாராயணம் செய்தும் சிறிது நேரம் மூலவரைத் தியானிப்பது ஒரு வழிபாட்டு முறையாகும்.

அடியார்கள், இதுவரை தம்மோடு வந்த சிவ கணங்களிடம் விடைபெற்று வாயிலைக்கடந்து செல்ல வேண்டும். பக்தி ஆர்வத்துடன் வந்த அடியார்கள், ஆலய வழிபாடு செய்து மனத்திருப்பதியுடன் வீடு திரும்புகின்றனர்.

### கொடி யேற்றக் காரணங்கள்

1. திருவிழாக்கள் தொடங்கி விட்டன என்பதற்கு அறிகுறி கொடியேற்றம் இது.

2. கோயிலின் எல்லைகளிலும், ஊர்ப்பகுதிகளிலும் அசுரர்களும் மற்றதீய சக்திகளும் இயங்காமல் தடுப்பது.

3. திருவிழாவுக்குச் சிவ கணங்களையும், தேவர்களையும், மற்றவர்களையும் வரவேற்பது.

4. ஆலயத்திற்குப் பாதுகாப்பு.

5. பக்தர்களுக்குப் பாதுகாப்பு

6. கொடி யேற்றம் திருவிழாவின் முதல் முக்கியமான அங்கம்.

7. பொதுவாக, கொடியேற்றம் 'காப்புக் கட்டுவதற்கு' நிகரானது.

## கொடியேற்றும் முறை

கொடியேற்றம் திருவிழாவின் தொடக்க நாளன்று நடைபெறுகின்ற அபூர்வக்காட்சியாகும்.

கொடியை ஏற்றுவது ''துவஜாரோஹணம்; இறக்குவது'' துவஜாவரோஹணம்''

முதலில் அங்குரார்ப்பணமும், வாஸ்து சாந்தியும் செய்து மறுநாள் காப்புக்கட்டி, ரிஷப யாகம் வளர்த்துக் கொடியேற்றுவது முறை.

கொடி. மரத்தின் முன்பு பேரிகை (முரசு) என்ற இசைக்கருவியை வைத்து, அதன் நடுப்பகுதியில் சிவனையும், வலப்பகுதியில் திருமாலையும், இடப்பகுதியில் பிரமனையும் ஆவாகனம் செய்து வழிபடுகின்றனர்.

கொடியேற்றத்தன்று பேரிகையை முழக்கித் தேவர்கள் - நவசக்திகள் - அஷ்டதிக்பாலகர் - அஷ்ட வசுக்கள் - அஷ்ட நாகங்கள் - அஷ்ட திக்கஜங்கள் - சப்த ரிஷிகள் முதலானார் பலரையும் வரவேற்கின்றனர்.

மந்திரங்களும், சுலோகங்களும் அப்போது இடையறாமல் ஓதப்படுகின்றன.

கோயிலில், திருவிழா நடைபெறுகின்ற அனைத்து நாள்களிலும் தெய்வ சாந்நித்தியம் எப்போதும் நிலைபெற்றிருக்க வேண்டும் என்று பிரசன்னமான எல்லாரிடமும் விண்ணபித்து வேண்டுகின்றனர்.

கோயிலில் கொடியேற்றிய பிறகு ஊர்மக்கள் யாரும் ஊர் எல்லையைக் கடந்து செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு உண்டு. ஊர் மக்கள் அனைவரும் திருவிழாவில் பங்கேற்க வேண்டும் என்பது இதன் அடிப்படை. ஊர் எல்லையை ஒருவன் கடந்துவிட்டால், அதைக் ''கொடி வாயில் அகப்பட்டுக் கொள்ளுதல்'' என்பர்.

கொடியேற்றிய பின் அட்டதிக்பாலகரை வழிபடுகின்றனர். தினமும் இருவேளை பூசை இவர்களுக்கு நிகழ்கின்றது.

கொடியேற்றத்தின்போது எல்லாத் தேவர்களும் மற்றவர்களும் பிரசன்னமாகி ஒருங்கே குழுமியிருப்பதால், அப்போது கொடியேற்றத்தைத் தரிசிப்பது அளவற்ற நற்பலன்களை அளிக்கக்கூடியதாம்.

கொடியேற்றத்திற்கு முன்னும், பின்னும் நடைபெறுகின்ற எல்லாக்கிரியைகளும் ஆலயத்தின் பாதுகாப்புக்கும், அடியார்களின் பாதுகாப்புக்கும் செய்யப்படுகின்றன. எனவே அவை மிக முக்கியமானவை.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து, திருவிழாக்கள் நடை பெறுகின்றன.


கொடியேற்றிய பிறகே தெய்வங்களின் பவனி உலா நடைபெற வேண்டும். திருவிழாக்களின் முடிவு கொடி இறக்கம்.

வெள்ளைஅல்லது மஞ்சள்துணியில் மூலவரின் வாகன இலச்சினை வரையப்பட்டிருக்க வேண்டும். கொடி மரத்தில் நீண்ட வெள்ளைத்துணியை முறுக்கி, தருப்பைக்கயிற்றுடன் கொடியேற்றுகின்றனர்.

## உலோகக் கொடிமரம்

சில கோயில்களில் உலோகக் கொடி மரங்களைக் காண முடியும். பித்தளை அல்லது செப்பால் செய்யப்பட்ட சேவல் கொடிமரம் ஒன்று, மூலவர் முருகனுக்கு நேர் முன், மயில் வாகனத்திற்குப்பின், முருகன் கோயில்கள் சன்னிதிகள் பலவற்றில் இருக்கின்றது.

கொடியிலுள்ள சேவல், முருகனை அண்ணாந்து நோக்கி, மெய் சிலிர்த்துத் தோன்றுகின்றது. தீப ஆராதனை முதலிய முக்கியமான காலங்களில், அந்த உலோகக்கொடியின் மீது, உயிருள்ள சேவல் வீற்றிருந்து, முருகனது திருக்கோலத்தையே தரிசிப்பதைப் பழனி, சேலம் குமரகிரி முதலான திருத்தலங்களில் பார்த்துப் பரவசமடையலாம்.



## கொடி மரம் - இலக்கியம்

கொடி மரம், கொடியேற்றம் பற்றிக் ''கொடிக் கவி'' என்ற ஒரு நூல் உள்ளது. இது சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கில் ஒன்று. உமாபதி சிவாச் சாரியார் இயற்றியது. தில்லையில் கொடி ஏற்றும் போக்கில், சைவ சித்தாந்தக் கருத்துகளை, நான்கு பாடல்களில் விளக்குகின்றது. நான்காம் பாடல், திருவைந்தெழுத்தின் பல்வேறு நிலைகளையும், மகிமைகளையும் தொகுக்கின்றது.

சிவாலயங்களில் இடபக்கொடியை ஏற்று கின்றபோது 'கொடிக்கவி'யை ஓதுவது பழைய மரபு

கொடிதரிசனத்தின் போது, 'கொடிக்கவி' யைப் பாராயணம் செய்யலாம். அல்லது நாலாம் பாடலை மட்டும் ஓதினாலும் நல்லது.

## கொடி மரம் - உட்பொருள்

கொடி மரம் பல உட்பொருள்களையும் தத்துவங்களையும் உணர்த்துகின்றது. முக்கியமான சில வருமாறு:-

1. பக்குவப்பட்ட உயிர்கள் இறைவனையே இடை யறாமல் நோக்கி வணங்க வேண்டும் என்பதைச் சுட்டுகின்றது கொடிமரம்.

2. உயிர், மும்மலங்களை வெற்றி கொண்டு வெற்றிக் கொடி நாட்ட வேண்டும். இத்தகைய உயிர்களே இறைவனோடு இரண்டறக் கலக்கக்கூடிய தகுதி வாய்ந்தவை என்பதைக் கொடிமரம் சுட்டிக் காட்டுகின்றது.

3. உயிர்களின் பொருட்டு இறைவன் ஆற்றுகின்ற ஐந்தொழில்களின் அடையாளம் கொடிமரம்.

4. கொடிமரம் - பதி; கொடி - உயிர்; கயிறு - பாசம். உயிர், பதியைப்பற்றுக்கோடாகக் கொண்டு, பாசங்களின் துணையுடன் அந்தப் பாசங்களையே வெற்றி பெற்றுக்கடந்து, உச்சநிலையை அடை வதைக் கொடியும், கொடியேற்றமும் காட்டு கின்றன.

5. கொடி இலச்சினையான காளை, தர்மத்தின் சின்னம்; உயிரின் அடையாளம். உயிருக்கு அருள்புரிய இறைவன் ஆயத்தமாக எப்போதும் இருக்கின்றான் என்பதைக் கொடியேற்றம் உணர்த் துகின்றது.

6. மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கின்ற குண்டலினி சக்தி, வீறுடன் நடந்து, ஆறு ஆதாரங்களைச்சீருடன் கடந்து, சகஸ்ராரத்தை அடைகின்ற யோக நிலை எழுச்சியைக் கொடி மரமும், கொடி ஏற்றமும் தெரிவிக்கின்றன. கொடிமரம் - முதுகு தண்டு; வெள்ளைத்துணி - சுழுமுனை நாடி ; தர்ப்பைக் கயிறு - குண்டலினி சக்தி.

கொடியேறியவுடன் இறைவனது புறப்பாடு நிகழ்வதைப்போல, குண்டலினி சக்தி சகஸ்ரா ரத்தை அடைந்தவுடன் சிவ தரிசனப் பேரின்பம் கிடைக்கிறது.

# ''தக்கனை வன்வாளியில் கொளும் தங்கரூபன்''

## - திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

அடியேனின் தந்தையார், திருப்புகழ் அடிமை கா.ரா. முருகேசனின் குருநாதர் ஆகிய வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள், ஸ்ரீ அருணகிரி ஜெயந்தி விழா வினை வள்ளிமலை திருப்புகழ் ஆசிரமத்தில் கொண்டாடிய சமயம், அன்னார், ''என்னால் பிறக்கவும் என்னால் இறக்கவும்'' எனும் வயலூர் பாடலை பாடி முடித்ததும், என் தந்தையாரை பார்த்து ஏழாவது அடியில் வரும்

"மன்னான தக்கனை முன்னாள் முடித்தலை
வன் வாளியில் கொளும் - தங்கரூபன்''

என்பதின் கருத்து என்ன எனக் கேட்டார், கல்வி அதிகாரி ஒரு பள்ளிக்கு விஜயம் செய்தபோது 3-ம் வகுப்பு மாணவனின் கல்வி தரத்தை அறிய 4-ம் 3-ம் சேர்ந்தால் எவ்வளவு எனக் கேட்டதும், மாணவன் 7-என்று பதில் கூறியதும் அதிகாரிக்கு முன்னமே இதை அறிந்திருந்தபோதிலும் சிறு மாணவன் வாயி னால் கேட்டு ஒரு தனி இன்பத்தைக் காண்பது போல், குருநாதரே மேற்சொன்ன பாடலின் கருத்து தெரிந்திருந்தபோதிலும் அடியேன் வாயிலாகக் கேட்டு மகிழவே முருகப் பெருமான் திருவுளம் கொண்டார் போலும் என அகமகிழ்ந்தார். இப்பாடலின் கருத்தை பின்வருமாறு என் தந்தையார்,

அரசாய் விளங்கின தட்சப்பிரஜாபதியை முன்பு (அவனுடைய) முடியையும், தலையையும் (அல்லது கிரீடம் அணிந்த தலையை) கொடுமை வாய்ந்த அம்பினால் கொய்த - தங்கரூபன்'' - எனக் கூறினார். இதில் தட்சனை வீழ்த்தியது யாரென்று வினாவிய குருநாதருக்கு,

"பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி ஈசனுக்கு''
- பொன்வண்ணத்து அந்தாதி - 1

எனும் சேரமான் பெருமாள் நாயனார் பாடலையும் மேற்கோளாகக் கோடிட்டு காட்டினார்.

சிவனது கோபத் தீயினின்று வீரபத்திரரும், தேவியின் கோபத் தீயினின்று காளியும் தோன்றி தக்கனை அழித்ததைப் பற்றி, ''மாது சஞ்சார முகில்'' எனும் திருப்புகழில் 5, 6, 7 - அடிகளில் தட்சனது யாகத்தில் தண்டனைகளை அனுபவித்தவர்களின் பட்டியலை அருணகிரியார் பாடியுள்ளதைக் காண லாம் என்றும், இதனை உறுதி படுத்தும் வகையில் பல இறை சம்மந்தமான பாடல்களிலிருந்து தணிகை மணி, வ.சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள் தந்த மேற்கோள்களையும் கூறினார்.

''மாக சஞ்சார முகில்'' எனத்தொடங்கும் அருணகிரியார் பாடலில் 5, 6, 7, அடிகளில் வருவது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வேகமுண் டாகியுமை சாற்று மளவினில்
மாமகங் கூரு மது தீர்க்க வடிவுடை
வீரனென் பானொரு பராக்ர னெனவர அன்றுசோமன்


மேனியுந் தேயகதிர் தோற்று எயிறுக
ஆனுகுந் தீகையற சேட்ட விதிதலை
வீழநன் பாரதியு மூக்கு நழுவிட வந்தமாயன்!
ஏகநின் றாகியமர் தோற்று வதறிட
வேகவுங் காரமொடு ஆர்க்க அலகைகள்
ஏறிவென் றாடுகள் நீக்கி முனிவரர்
வந்துசேயென்றீச!

இப்பாடலில் தக்கனது யாகத்தில் தண்டிக்கப் பட்டவர்களைப் பற்றி கூறியுள்ளதைச் சிறிது ஆராய் வது அவசியம் எனக் கூறினார் என் தந்தையார்.

வேகம் (கோபம்) தோன்றி, உமை கூறின வுடனே (தக்ஷனுடைய) பெரிய மகம் மேற்கொண்டு நடப்பதை அழிக்கும் பொருட்டு ஒளி நிறைந்த வீர (பத்திரன்) எனப்பட்ட பராக்ரம சாலியாகிய ஒப்பற்ற வன் தோன்றிவர, அன்று, சந்திரன் -

உடல் தேய, சூரியனுக்கு உள்ள பற்கள் உதிர, (யாகப்) பசுவைத் (தடுத்துப்) பொடியாக்கும் தீ (அக்கினியின்) கை அற்றுவிழ, முதன்மையான தட்சப்பிரஜாபதியின் தலை அற்றுவிழ, நல்ல சரஸ் வதியின் மூக்கு அறுபட்டு நழுவி விழ, (அங்கு) வந்திருந்த திருமால் -

ஒட்டம் பிடிக்க அந்த யாக சாலையில் நின்று, போர் விளைத்து, (அங்கிருந்தவர்களை) வைது (திட்டி) கோப ஆங்காரத்தோடு ஆரவாரஞ் செய்யப்



பேய்க்கூட்டங்கள் கூடி வென்று ஆடின அந்த (யாக) சாலையை விட்டு (நீக்க - விலக்க) - (அல்லது) (யாவரையும்) வெளியே நீக்கினவனான (சிவனும்), முனிவர்களும் வந்து (சேயே) என்னும் 'ஈச' போற்றி!

என்னும் பாடலின் கருத்தை வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள் மிகவும் ரசித்து அப்பாடலினால் மிகவும் ஈர்க்கப்பட்டவரானார்.

இதனைக் குறித்து தணிகை மணி வ.சு. செங்கல்வராயபிள்ளை தேவாரங்களில் இருந்து சில பாடல்களை மேற்கோள் காட்டினார்.

''சுருதியான் தலையும் நாமகள் மூக்கும் சுடரவன்
கரமும் - முன்னியங்கு
பருதியான் பல்லும் இறுத்தவர்க் கருளும்
பரமனார்'' -
(சம்பந்தர் - III - 118-5)

''தக்கனது பெருவேள்விச் சந்திரன் இந்திரன்
எச்சன் அருக்கன்
அங்கி மிக்க விதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்''
- (சம்பந்தர் - I - 131 -3)

"வேகம் உண்டாகி உமை சாற்றின'' வாசகம் -
''சிறிய தொல்விதி பெரிதுனை இகழ்ந்தனன்
பெரும அன்னவன்
அரிதுசெய் வேள்வியை அழித்தி என்னவே'' -
(கந்த புராணம் - உமை வரு படலம் 59)

**தேவர்கள் அடைந்த தண்டனைகள்**

அரி - 'கதைய தொன்றால் அடித்தனன் அரிமுன் வீழ்ந்தான்'

பிரமன் - 'குட்டினன் ஒருதன் கையால்.'

நாமகள் - 'மூக்கொடு குயமும் கொய்தான்.'

சந்திரன் - 'வீரன் தன்னொரு பதங்கொடே தேய்த்திட்டான்'

சூரியன் - 'கதிரவன் .... கவுளிடை எற்றினான் உகுப்பத் தந்தமே'

பிறிதொரு சூரியன் - 'பகனெனும் வெய்யவன் விழி பறித்தனன்'

கூற்றுவன் (எமன்) - 'கூற்றுவன்.... ஓடலும் வெட்டினன் அவன் தலை.'

| | |
|---|---|
| இந்திரன் | - 'வாசவன் குயிலென உம்பரில் அடைந்தனன், அண்ணல் விட்டினன்.' |
| அக்கினி | - 'அங்கியை - அவன் கரத்தைத் துண்டமதாகவே துணித்து வீட்டினான்.' |
| தக்கன் | - 'ஈசனை இகழ்ந்தனை அதனால் தண்டம் ஈதென வாள்கொடே அவன் தலை தடிந்தான்.' |

(கந்தபுராணம் - யாக சங்காரம் - 20-50.)

திருப்புகழ் பாடலாகிய ''மாக சஞ்சார முகில்'' எனத் துவங்கும் பாடலுக்கு தேவாரத்திலும் மற்றும் ஏனைய நூல்களிலிருந்து உவமைகளைக் கொடுத்துள்ளது நோக்கின் அருணகிரியாரே புத்துயிர் பெற்று நம் மனக்கண் முன்காட்சியளிப்பதாகவே தோன்றுகிறது.

தணிகைமணி அவர்கள் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப கூறும் சொல்வளம் படைத்தவர் என்பதற்கு இவரது வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை வாசகர்களின் நினைவிற்கு கொண்டு வருவது அவசியம், திருப்புகழ் பாடல்களுக்கும், கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, திருவகுப்பு போன்ற கவிகள் அனைத்திற்கும் உரை எழுதி வந்துள்ளதை டாக்டர். உ.வே.சா - அவர்கள் கண்ணுற்றதும், தாம் நோய்வாய் பட்டுபடுக்கையில் இருந்தபோது தமது நண்பர்கள் இடம் தணிகை மணி அவர்களைக் காண விருப்பம் உள்ளதாக தெரிவித்தார். இச்செய்தியை நண்பர்களின் மூலம் அறிந்த தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் தாம் முதுமை அடைந்துள்ளபோதிலும், உடனே டாக்டர் உ.வே.சா. அவர்கள் இருப்பிடத்திற்குச் சென்றார். அங்கு அவரது பாதங்களைத் தொட்டு, ''இந்த இரு பாதங்கள் தானே திருப்புகழ் ஓலைச் சுவடிகளை ஊர் ஊராக சென்று சேகரித்து என் தந்தையாருக்கு தந்தது'' என வியந்து அவர் பாதங்களைத் தொட்டுப் பாராட்டினார். டாக்டர். உ.வே.சா அவர்கள் படுத்த படுக்கையாக இருந்ததால் வ.சு.செ. பிள்ளையை எழுந்து உட்கார்ந்து விசாரிக்க முடியாது போயிற்று, பிறகு அவரது அருகில் சென்ற சமயம் தணிகை மணியின் இருகரங்களையும் தன் கரங்களால் ஒரு சேரப் பற்றிக்கொண்டு ''திருப்புகழ் முதலாக உள்ள பாடல்களுக்கு உரை கண்டது இந்தக் கரங்கள் அல்லவா!'' என்று கண்களில் நீர் வழிய இருவரும், ஒருவரோடு ஒருவர் பரஸ்பரம் பாராட்டிக் கொண்டனர்.

தணிகை மணி அவர்கள் அருணகிரியார் பாடல்களுக்கு உரை காண முறுபடும்போது அதன் சம்பந்தமான ஏனையோரது பாடல்களை ஆராய்ச்சி செய்து விளக்கம் அளித்துள்ளது, இவரது புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. திருப்புகழ் முதலாகவுள்ள பாடல் களுக்கு உரை கண்டது இவரைத் தவிர இன்றுவரை வேறு எவரும் எழுதியதாக அறியப்படவில்லை. அன்னாரின் ஆத்மா மறைந்தாலும் திருப்புகழுக்காக ஆற்றிய பணிகள் யாவும் மங்காது, எக்காலத்தும் புகழோடு விளங்கும் என்பதில் ஐயம் இல்லை.

''செயற்குஅரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்''

என்னும் திருக்குறளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக சுமார் 600 வருடங்களுக்கு முன்னர் தோன்றிய அருணகிரியாரை ''சொல்லின் செல்வர்'' என்று அழைப்பதில் என்ன பிழை இருக்கப்போகிறது?

★★★

## வாசகர் எண்ணங்கள்

அன்புடையீர்! திருக்கோயில் நவம்பர் 2000 இதழ் படித்து மனம் மகிழ்ந்தேன். ''திருக் கோயில்'' இதழின் சிறப்பாசிரியர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்கள் ''அருளாளர்கள் கண்ட முருகன்'' எனும் ஆய்வரங்கில் ''குமரகுருபரர் கண்ட குருபரன்'' என்ற தலைப்பில் ஆற்றிய ஆய்வுரை படித்தேன், வியந்தேன், பரவசம் அடைந்தேன்.

- பி.ஆர். மோகன்
உதவி ஆணையர் (வணிகவரி)
திருவண்ணாமலை.

# அன்பே சிவம்

- டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

மதிப்பியல் பேராசிரியர், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.

'தென்னாடுடைய சிவன் எந்நாட்டினருக்கும் இறைவன்' எனச் சைவர்களால் கூறப்படுகின்ற வாக்கு, ஒரு தத்துவார்த்தியான உண்மை.

ஆதிகாலத்து உலகில் நாகரீகம் மிளிராத காலத்து இந்தியாவில் இறையுணர்வு மிகவும் உயர்ந்திருந்தது. மொழி, சமுதாயம் மற்றும் கலையுணர்வு மேலோங்கியிருந்தது. அதனால்தான் உலக வழிகாட்டியாகச் சிவபெருமான் எந்நாட்டினருக்கும் உரித்தானவன் எனக் கூறப்பட்டது.

எல்லாம் வல்ல இறைவன் ஒருவன், அவன் தான் எல்லாமறிந்தவன் சிவன் என்பதற்கு ஆதி காலந்தொட்டு அக்கொள்கையைக் கடைப்பிடிக்கும் தமிழ்ச் சான்றோர் வடித்த திருமறையிலிருந்து காண்கிறோம். சிவநெறி கடைப்பிடித்த சமயக்குரவர்கள் சிவனின் விஞ்ஞான தத்துவத்தை விளக்குவது மட்டுமின்றி, அதன் மூலம் சமுதாய சமத்துவக் கொள்கையினையும் பரப்பினார்கள். தாயுமானவர் ''அன்பருக்குப் பணி செய்ய என்னை ஆளாக்கி விடு'' ''எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுவதல்லாமல் வேறொன்றும் அறியேன்'' என இவ்வுலகச் சமுதாயத் தொண்டினை உயர்த்திக் கூறினார்கள்.

சைவக் குரவர்களின் சமத்துவக் கொள்கை, சமுதாய நல உணர்வு மிகவும் பாராட்டுக்குரியது. அறம் பற்றிக் கூறி, அதனின் காணும் இன்பத்தைப் பல வாறாக வர்ணித்துள்ளார்கள்.

திருமூலர் சிவனை, ''ஓர் அன்பு வடிவம்'' எனக் கூறினார். அன்புதான் சமுதாயத்தில் இன்பமுண்டாக்கும் என்பதற்கு நமது மனத்தில் குடியிருக்கும் எண்ணம் சாலச் சிறந்ததாக இருக்கும். நாம் வழிபடும் இறைவனின் தன்மையை உணர்த்த திருமூலர் கூறியது உயர்தத்துவமாகும்.

மனத்தை ஒன்றுபடுத்தவும், சீர்படுத்தவும் நம்மில் உயர்பொருள் தேவை. அதன்மேல் உள்ள அபிமான உணர்வுதான் நம்மைக் கட்டுப்படுத்தும் ஒரு கருவி. சமுதாயத்தில் அறம் கொழிக்க, சமாதானம் நிலவ, இன்பம் பெருக, ஆக்க வேலைகள் உருவாக, மனத்திலே ஒரு நிறைவு காண, தேவை ஒரு கடவுள். அந்த இறைவனுக்கு உருவம் இல்லை. எனினும் வர்ணனைகள் உண்டு. கோயில் எனக் கூறக் கூடிய சிதம்பரத்தில் ''சிதம்பர ரகசியம்'' எனும் தலப்பொருளை அறிவோம். அந்த ரகசியம் அகண்ட பிரபஞ்சத்தில் பூமிக்கும் வானத்திற்கும் அளவளாவிப் பரவியுள்ள இறைத் தன்மையாகும். எப்படி ஒலி, ஒளி பரந்து விரிந்து பரவுகிறதோ அதுபோல இறைத்தன்மை விரிவாகப் பரவுமேயானால், அதனால் ஏற்படும் விழைவு அறம் கூறும் இன்பமாகும். எனினும் மனிதன் தனது அறிவியல் கற்பனையில் உருவம் உண்டாக்கினான்.

சிவனுக்கு இரு உருவங்கள் தந்தனர். ஒன்று சிவலிங்கம், இரண்டாவது தில்லை நடராஜர். இறையுணர்வும், பக்தி நெறியும் தமிழர்களின் ஊனில் கலந்து உயிரில் கரைந்த ஒன்று. அதற்குச் சான்று தேவார, திருவாசகப் பதிகங்களும், நம் பண்டைய மன்னர்கள் கட்டிச் சென்ற கற்கோயில்களும் ஆகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆலயங்களுக்குக் குறைவேயில்லை.

இறைவனும் அருகில் உமாதேவியாரும் அமர்ந்திருக்க, இடையில் முருகப் பெருமானும் ஒருங்கேயிருக்கும் இந்தக் கோலத்தை சோமஸ்கந்தர் (ஓம் - உமாஸ்கந்தர்) என்று மூவரையும் சேர்த்தே குறிக்கப்படுகிறது.

கணவன், மனைவி, பிள்ளை என மூவரும் சேரும்போது குடும்பமும் முழுமையடைகிறது. மனிதக் குடும்பத்திற்கு மூலக் கருவை அருளியவன் தான் தான் என்பதை இறைவனும் குடும்பியாக இருந்து காட்டுகிறான். இறைவன் தனியாக நின்ற போது இயக்கமின்றி (Potential Energy) ஆக இருப்பான். அவனிடத்து அருள் வெளிப்பட்ட போது (Kinetic Force) உமையொரு பாகனாக நிற்கும் நிலை. அவ்வருள் இன்னும் மலர்ந்து முழு விரிவோடு நிற்பதே சோமஸ்கந்தருடைய திருக்கோலம். மூவர் என்று தனித்தனியே பார்க்கும்படி தோன்றினாலும் மூவரும் ஒன்றின் சுவடுகளே. மூவரும் ஒருவரே ஆதலின் மூவரையும் ஒன்றாக வைத்து ''சோமஸ்கந்தர்'' என்கிறோம்.

அப்பர் சுவாமிகள் மூவரையும் ஒன்றாக வைத்து ஒரு வரியில் ''நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்'' என்கிறார். (கடம்பனை - கடம்ப மாலையை அணிந்த முருகனைப் பெற்றவன் -

பெற்றவளாகிய உமா தேவியார், பங்கினன் - உமாதேவியை உடலின் ஒரு பங்காகக் கொண்ட இறைவன்).

''நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே''

இப்படி மூவரும் ஒருவராக உடைய ஒருவன் இறைவன். உலகிலுள்ள ஆருயிர்களைக் காப்பாற்றுவதைக் கடமையாகக் கொண்டதைத் தெரிவிக்கவே மூவராக எழுந்தருளியுள்ளனர். அவனுக்கு நம்மைக் காப்பதே கடமையானால், நமது கடமை என்ன? அவனுக்கும் அவனது குழந்தையாகிய ஆருயிர்களுக்கும் தொண்டுகள் செய்துவிட்டு - நான் செய்தேன் என்ற அகங்காரம் இன்றி இருப்பது தான் நம் கடமை) (நன்றி : திருமுறைமலர்கள் - கி.வா. ஜகந்நாதன்)

இறைவன் அருளால் பகைப் பொருட்கள் திங்களும் பாம்பும் ஒன்று சேர்ந்து சிவபெருமான் செஞ்சடையிலே சேரயிருப்பினும், தம் பகைமை நீங்கி ஒன்றுபடும் என்று குறிப்பால் புலப்படுகிறது. பிறையும் பாம்பும் இறைவன் திருமுடியில் வேறுபாடற்று அவன் திருக்கோலத்தில் ஒன்றி நின்றாற் போல இறைவன் அருள் இணைந்தால் இணையாத பொருட்கள் இணையும். நில்லாத பொருட்கள் நிற்கும். சிதறிய பொருட்கள் சேரும், அமுதமும் நஞ்சும் ஒரே தன்மை பெறும். மனிதர்கள் தம்முடைய தகுதியால் வேறுபடுவர். ஆனால் இறைவன் அருளைப் பெற்றபின் இயல்புகள் மாறி ஒரே நிலையடைவர். காளத்திநாதனை வண்ங்கிய வேதியராகிய சிவகோசரியாரும், வேடனாகிய கண்ணப்பரும் இறைவன் திருவருள் பெற்றபின் வேறுபாடு இலர் ஆயினர். கங்கைக்குள் புகுமுன் யமுனையாகவும், சாக்கடையாகவும் இருந்தவை கங்கைக்குள்ளே சேர்ந்த பிறகு கங்கையாகவே ஆகிவிடுகின்றன.

இறைவனைச் சேர்ந்தபின் அவன் அடியாராகும் திறத்தில் மேல்கிழ் மாறுபாடு இல்லை. இவற்றை 'பின்னு செஞ்சடையிற் பிறை பாம்புடன் வைத்த' செய்தி சொல்லாமற் சொல்லுகிறது.

(நன்றி : உள்ளங்கவர் கள்வன் - கி.வா. ஜகந்நாதன்)

சந்ததிகளின் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். வள்ளுவர் நன்மக்கட்பேறு பற்றி உணர்த்தியுள்ளார். இன்றைய சூழ்நிலையில் எதிர் கால சந்ததியினரை நன்றாக உருவாக்க மிகுந்த கவனம் தேவை. புத்தர் ஆசையைத் தவிர்க்க வேண்டும் எனக் கூறியதால், வேகமாகப் பரவிய அன்றைய அந்தக் குறிக்கோள் பலருடைய மனத்தில் பதிந்து

## அருணாசலம் அருள்புரிவார்

*நந்தவனம் புக்கு*
*நறுமா மலர்எடுத்துச்*
*சுந்தரப்பண் மாலை தொடுத்*
*தணிந்தே - எந்தை*
*அருணேசா என்பாரை*
*ஆபத்தில் காக்கும்*
*தருணேசா சோணா சலா!*

*- சோணாசல வெண்பா*

மண வாழ்க்கையைத் தவிர்த்தனர். அந்த நிலை நமது சமூகத்தினரை மிகவும் பாதித்தது. இந்த நிலை நீடித்திருக்குமேயானால், மக்கள் எதிர்காலம் ஒரு கேள்விக் குறிதான்.

ஆனால் இந்த சிவச்சமயத்தில் புனிதமாகக் காப்பாற்றப்பட வேண்டியது மனிதப்பிறவி. மனிதப் பிறவி என்ற முறையதனை நல்ல முறைல் ஏற்றுப் பலனடைய ஆதிகாலத்து, ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே'' என்று அப்பர் அடிகளார் பாடியதிலிருந்து விளங்கும்; தத்துவம் சிவலிங்க வடிவமைப்பு, இதனைப் புனிதப்படுத்த வேண்டுவது நமது கடமை. கலை வளத்திற்கும், அறிவியல் முன்னேற்றம் அடைந்த பழங்காலத்துக்கும் எடுத்துக்காட்டு தில்லை நடராஜர் உருவமைப்பு. எழில் மிகுந்த நடனமாடும் நிலை அதிர்வாய் இயங்கும் (Kinetic Force) இயக்கத்தை குறிக்கும். மேலும் அதனின் வெளிப்படும் கதிர்வீச்சு ஒளிப்பிரகாசம் விதானத்தில் தெளிவாகிறது. தனது உடலிலுள்ள பஞ்சபூதங்கள், உருவாக்கும் உயிருக்கு அடிப்படை தேவைகள் ஆகின்றன. குனித்தப் புருவம் கொவ்வைச் செவ்வாய் கொண்ட குமிள் சிரிப்பு மனித வாழ்க்கையின் இனிமையைப் புலப்படுத்துகிறது. இந்த நடராஜரின் உருவ அமைப்பு பொறியியல், அறிவியல் கொண்டு செதுக்கப்பட்டது ஒரு ஆச்சர்யம். பரந்து விரிந்த மார்பகம் மற்றும் உடலின் கனத்தைக் குறுகிய தண்டைக் காலில் புவிஈர்ப்பு தன்னை (Centre of Gravity) செய்துள்ளது சிறந்த படைப்பாகும். இந்தச் சூழ்நிலையில் தான்

தில்லை நடராஜர் உருவ அமைப்பு தெளிவாகவும், அறிவுடையதாகவும், இனிமையுடையதாகவும், வியப்புடையதாகவும் விளங்குகிறது.

இன்றைக்கு உலகிலுள்ள எல்லா நாடுகளின் இல்லத்திலும் வேண்டி விரும்பி பெற்றுக் கொள்ளும் ஒரு நினைவுப் பொருள் தில்லை நடராஜர் வடிவமைப்பு. ஏனையோர் வியந்து நயந்து போற்றுகின்ற தங்கள் இல்லத்தில் ஒரு பொருளாக இந்தச் சிலை வடிவமைப்பைப் பெற்றுள்ளார்கள். இந்த வடிவமைப்புக்குப் பின் உள்ளஅறிவியல் தத்துவத்தைத் தெளிவுபடுத்துவோமேயானால், மேலை நாட்டினர் பண்டைய காலத்துச் சிவதத்துவத்தின் அறிவியல் தெளிவினைப் பாராட்டுகிறார்கள்.

சிவ கோயில்களின் அமைப்பு அடுத்து மிகவும் வியக்கத்தக்கது. கோயிலின் வெளிப்பிராகார மதில் சுவர்கள் சீராகவும் நேராகவும் வேலைப்பாடுகளுடன் சமசதுரம், நீள் சதுரமாகவும் இருக்கும். கிழக்கு வாயிலுக்கு நேர் எதிராக சுவாமி சந்நிதானம் இருக்கும்.

கோயில் நுழைவாயில் நடையில் ஒரு உயர மேடையாக இருக்கும் அஃது மழைகாலத்தும் மற்றும் வெள்ளம் ஏற்படும் காலத்திலும் மழைநீர் கோயிலின் உள் செல்லாமல் தடுப்பதாகும்.

கோயில் கற்கள் எல்லால் சிலைகளாக வடிக்கப்பட்டிருக்கின்றன. மூன்று dimensional உருவங்கள் சிறிதாகவும், பெரியதாகவும் வடிவமைப்போடு சிறந்ததாக விளங்குகின்றன. கோயில் வளாகத்தில் சிலைகளாக உள்ளன. இந்த உயிரினங்களின் உருவத்தை ஆராயும்போது, இக்கோயில்கள் கட்டப்பட்ட காலம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எனத் திட்டவட்டமாகக் கூறலாம். பொதுவாக கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து வாழ்ந்த சிவ சமயத்தினர் மிகச் சிறந்த கலாச்சாரத்தையும், ஓவிய கலைகளையும், கருங்கல் கட்டிடக் கலைகளையும் மற்றும் ஏனைய விவரிக்க இயலாத உயர் திறன்களையும் பெற்றிருந்தனர் என்பதற்கு இக்கோயில்கஜே சான்றாகும். இன்றும் கோடை வெயில் கொளுத்துகின்ற போதும் கோயிலினுள் செல்வோமேயானால் குளிர்ச்சியை உணரலாம். இஃது கோயில் கட்டிட அமைப்பிலுள்ள ஓர் உன்னதமான தகுதி. அக்காலப் பொறியியல் நிபுணத்துவத்தை வியப்பில் ஆழ்த்துகின்றது. மேலும் ஊருக்குள் வெள்ளம் வருமேயானால் கோயில் வாசலிலுள்ள உயர் பீடத்திற்கு மேல் நீர் பெருகாமல், கோயிலினுள்ளே வெள்ளம் புகா வண்ணம் பாதுகாப்பு அரண்கள் அமைந்துள்ளது. மேலும் வெள்ளப் பெருக்கால் அவதிப்படும் ஊர்மக்கள் தஞ்சம் புக ஆதிகாலத்தில் சிவன் கோவில் சிறந்த அடிப்படையில் கட்டப்பட்டுள்ளன.

சிவன் கோவிலுக்கு வரும் பக்தர்களின் பிரார்த்தனைகளை ஆராய்வோம். தனிப்பட்ட பிரார்த்தனை, குருக்கள் மூலம் பிரார்த்தனை, கூட்டுப் பிரார்த்தனை என உள்ளன. காலை, மதியம், இரவு பிரார்த்தனை மற்றும் வாராந்திர, மாதாந்திர பிரார்த்தனைகளும் உண்டு. மனவளம் தேடிவரும் பக்தர்கள் உளவளம் நிறைவு பெற்று திருப்திகரமாகக் கடவுளை வணங்குவதைக் காணலாம்.

சிவன் கோவில் பிரார்த்தனை முறைகள் அறிவியல் சார்ந்தவை. கோயிலை அணுகும் பக்தர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு பெறுகிறார்கள். உள்ளம், உருவம், உடல் வளர்ச்சிக்கு பிரார்த்தனை முறைகள் உதவுகின்றன. வில்வ இலை, தீப ஆரத்தி, அன்ன படைப்புகள் உடலின் நல வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது. அதுபோலவே சமூக நல வாழ்வுக்க கூட்டுப் பிரார்த்தனை மற்றும் கூடி வாழ வேண்டிய உயர் தத்துவத்தை உணர்த்துவதையும் காணலாம்.

தாயுமானவர் கூறிய

''எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் -
அன்பருக்கு பணி செய்ய என்னை ஆளாக்கி விடு''

போன்ற உயர்தத்துவத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை.

சிவன் கோயில்களில் ஆரம்ப காலத்துப் பிரார்த்தனை மொழி தமிழ்தான் ஆகும். சமயக் குரவர்கள் வாழ்த்துப் பாட்டுகள் இதற்குச் சான்றாகும். அன்றைய தமிழ் மொழியில் இனிமை காணலாம். கருத்துச்செறிவு காணலாம். சமுதாய சமத்துவக் கோட்பாடுகள் காணலாம். சமுதாய உயர்வினையும் காணலாம்.

இப்படியாகச் சிவசமய முன்னோர் நாகரீக வாழ்க்கையை இவ்வுலகில் கடைப்பிடித்தனர்.

அவர்களது அறிவியல் உணர்வு, சிலை வடிவமைப்பு, சித்திர வேலைப்பாடுகள், கோயில் கட்டிட அமைப்பு, மற்றும் தன்னையே தியாகம் செய்யும் சிவனடியார்களின் வாழ்க்கை, பக்தி நிறைந்த தியாக மனப்பான்மையைக் காட்டுகிறது.

இதனை வெளிப்படுத்துவது சேக்கிழார் வடித்த பெரிய புராணமாகும். பிள்ளைக் கறியமுது கேட்ட வரலாறு, இஸ்லாமியத்திலும், கிறுஸ்துவ சமயத்திலும் காணப்படுகிறது. அதாவது ஆண்டவனை அணுக வேண்டுமெனில், முழு அளவு பக்தி செலுத்தப்பட வேண்டும். இதனை வலியுறுத்துவது, 63 நாயன்மார்களின் வரலாறு.

63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு அன்பை வலியுறுத்துவதுடன் நமக்கெல்லாம் உயர் வாழ்க்கை முறையை உணர்த்தும் உயர் பொக்கிஷமாகும்.

இதுதான் சிவம் ஒரு சமுதாயம், சமயம் ஆகும்.

# கவசத் திருநீறு

- பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,

**விபூதிதோன்றிய விதம்**

ஆணவ மலத்தை நீக்கி அருளுபவன் சிவ பெருமான். அவர் திருவருளாகிய உமாதேவியார் பத்தினியாகவும், பிரளய வெள்ளத்தையே நீராகவும், அண்டங்களையே மண்டபங்களாகவும், பூவுலகமே வேதியனாகவும், அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் அவியாகவும், ஏனைய உயிர்கள் பசுக்களாகவும், கொண்டு, தமது நெற்றியாகிய குண்டத்தில் அக்கினிக் கண்களில் அக்கினியை மூட்டி யாகம் செய்தருளினார். அந்த யாகத்தில் தோன்றிய வெண்ணீற்றைத் தமது திருமேனியில் பரவிப் பூசி விளங்கினார் சிவபெருமான் என்று தணிகைப் புராணம் கூறுகிறது.

**விபூதிக்குரிய வேறுபெயர்கள்**

1) வி = மேலான; பூதி = ஐசுவரியம். மேலான ஐசுவரியத்தை அளிப்பது. அதாவது ஐசுவரியம் என்றால் மோட்ச வீடு, முத்திப்பேற்றைக் கொடுப்பது.

2) பாவங்களை எல்லாம் போக்கி நீறாக்குவதால் நீறு, பஸ்பம் பற்பம், என அழைக்கப்படுகிறது.

3) அறியாமை நீங்கும்படி சிவஞானமாகிய சிவ தத்துவத்தை விளக்குவதனால் இதற்கு பசிதம் என்று பெயர்.

4) உயிர்களின் மலத்தை நீக்குவதனால் சாரம் என்று பெயர்.

5) ஆன்மாக்களைத் துன்பங்களிலிருந்து காப்பத னால் இரட்சை (காப்பு) என்று பெயர்.

வீராகமம் விபூதிக்குரிய பெயர்கள் எல்லா வற்றையும் விளக்கிக்கூறுகிறது.

**நம்பக அடையாளம், பேரொடுக்க அடையாளம்**

நாயகனை உடைய நாயகிக்கு மஞ்சள்பூச்சும், கழுத்தில் தாலியும் இன்றியமையாதன ஆகும். அது போலவே சிவபெருமானை வழிபடும் சிவபக்தர் களுக்குத் திருநீறும், ருத்திராட்சமும் இன்றியமையா தன என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. விளையாட் டுப் பாடவேளையில் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டையும், பனியனும் அடையாளம் ஆவதுபோல ஆலயம் செல்லும் சிவனடியார்களுக்கு திருநீறு ஓர் அடையாளம் ஆகும்.

கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் புனித வெள்ளி நாளுக்குப் பிறகு அனைவரும் சிலுவை போன்று செய்த ஓலையைச் சுட்டு அதன் சாம்பலை ஒரு புதன் கிழமையில் அணிந்து கொள்வார்கள். அந்த நாள் சாம்பல் புதன் Ash Wednesday என வழங்கப்படுகிறது. எல்லாக் காரியங்களையும் திரு நீறு அணிந்து கொண்ட பிறகுதான் ஆரம்பிக்க வேண் டும் என்பது சைவ மரபாகும்.

**இலக்கியச்சான்றுகள்**

''மண்டபம் பல கடந்து மறுகையால் நீறணிந்து
பண்டரங்கன் ஆடுங்கால் பசுணஎழில்
அணைமென்தோள்
வண்டரற்றும் கூந்தலாள் வளர் தூக்குத் தருவாளோ''

- கலித்தொகை - கடவுள்வாழ்த்து

''காடுடைய சுடலைப் பொடிபூசி''

- ஞானசம்பந்தம் தேவாரம்

''திருமுகம் கருணை காட்டத்
திருக்கையால் நீறுகாட்டி''

- திரு.ஞா.சம். தேவாரம்.

''ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர்''

- திருக்கோவையார்.

''வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன்றன்''

- திருக்கோவையார்.

''அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தவமும் நீருரித்த வாறென் - முடித்தலத்தில்
ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ.''

- காரைக்கால் அம்மையார் இரட்டைமணிமாலை

## அழகனருள்!

– கவிஞர் ஆற்றலரசு

அழகென்ற பொருளொன்று மில்லை - முருகன்
அழகுக்கு இணையாக வேறொன்று மில்லை!
அழகாலே மதிமாறும் தன்னால் - என்றும்
அழகோடு ஒன்றாகி நிலையாகும் பின்னால்!

அன்பான தமிழுக்கீ டில்லை - எழில்
அமிழ்தாகும் மயங்காத செயலொன்று மில்லை!
பொன்னான கதிராலே எல்லாம் - அழகன்
பொலிவாலே சூலோடு மாறாத தெல்லாம்!

மலை மீது வீழ்கின்ற அருவி - எழில்
மாட்சியில் நினைவினை ஆயுமாம் துருவி
கலையாலே கவிதைகள் பிறக்கும் - முருகன்
கருணையால் தேனான எண்ணமே சிறக்கும்!

பாய்கின்ற வற்றாத ஆறு - தமிழ்ப்
பயிரினை வளர்த்திடும் என்றேநீ கூறு
ஆய்கின்ற நினைவெல்லாம் மேரு - முருகன்
ஆற்றலுக் கிணையேது நாடோறும் கூறு!

''பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீர்''
- பெரி. புரா. மெய்பொருள் நாய. புரா. 22.

''திருநீற்றின் பொலிவுமேற் கண்டேன்''
பெரி. புரா. ஏனாதிநாத புரா. - 28.

ஐங்கரப் பெருமானால் எழுதப்பெற்றதும், ஐந்தாம் வேதம் என ஆன்றோர்களால் புகழப்பெற்றது மான மகாபாரதத்தை முதன் முதலில் வடமொழி யில் அருளிச் செய்த வேதவியாசரும் விபூதி அணிந் திருந்தார் என்பதை,

''தொழுது நெற்றியில் விபூதியால்
அன்னையின் துணையடியாற்
விழுதுடைத் தனி யாலென விழுந்த தொல்
வியாதனை முகநோக்கி''

என வரும் வில்லி பாரதம் சம்பவச் சருக்கம் 10-வது பாடலின் வாயிலாகவும்,

''பூதி நலந்திகழ் பூரு குலத்தோர்க்கு
தாதியனை அனங்கனை வென்றோன்''

என வரும் வில்லிபாரதம் வாரண வதைச் சருக்கம் 95-வது பாடலின் மூலமாகவும் அறியலாம்.

''ஆசினால் மறைப்படியும் எண்ணில் கோடி
ஆகமத்தின் படியும் எழுத்தைந்து கூறிப்
பூசினான் உடலமெலாம் விபூதியாலெம்
பூதியவை புரிந்த சடைப்புறத்தைச் சேர்ந்தான்''

என்று வரும் வில்லிபாரதம் அர்ச்சுனன் தவநிலைச் சுருக்கம் 37-வது பாடலால் பாரத காலத்திலும்,

''இராவணன் மேலது நீறு'' என்ற திருஞான சம்பந்தர் தேவார வரியால் இராமாயணகாலத்திலும்,

''உண்மாசு கழுவுவது நீறென்றே உபநிடதம்
உரைப்பக் கேட்டும்
மண் மாசுபடப் பூசும் விரலுடையார்''

என்று வரும் விருத்த குமார பாலரான படலம் 10-வது பாடல்வாயிலாக, திருவிளையாடற் புராண காலத்திலும்,

சென்றுகிழவோன் குறவர் செம்மலெதிர் நண்ணி
நின்றுபரிவோடு திருநீறு தனைநல்கி''

என வரும் கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலம் 95-வது பாடல் மூலமாக கந்த புராண காலத் திலும், திருநீறணியும் நல்லபண்பு நமது பரந்த பாரத பூமி முழுவதும் பரவியிருந்த உண்மைச் செய்தி களை எல்லாம் நாம் உணரலாம்.

தெய்வச் சேக்கிழாரால் ''மங்கையர்க்குத் தனி யரசி எங்கள் தெய்வம்; தென்னர்குலம் பழிதீர்த்த தெய்வப் பாவை, பொங்கொளி வெண் திருநீறு பரப்பினார்'' என்றெல்லாம் போற்றிப் புகழப் பெற்றவருமான பாண்டிமாதேவி மங்கையர்க் கரசியாரின் வேண்டு கோளுக்கிணங்க, பாண்டிநாடு போந்து, சமணமதச் சார்பில் இருந்து கொண்டு, சைவ சமயத்திற்கும், திருத்தொண்டர் குழாத்திற்கும் தீச் செயல் புரிந்த மன்னன் கூன்பாண்டியனுடைய வெப்புநோய் விலகிப் போகவும், அவன் அறியாமை அகன்று உண்மை நெறி உணர்ந்து சைவசமயமே மெய்ச்சமயம் என்றுணர்ந்து மீண்டும் அதனைத் தழு விடவும், அம்மன்னன் மட்டுமல்லாமல், உலகமெல் லாம் ஓதி உய்யும் பொருட்டு

"மந்திரமாவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தரமாவதுநீறு; துதிக்கப்படுவது நீறு;
தந்திரமாவது நீறு; சமயத்திலுள்ளது நீறு;
செந்துவர்வாய் உமை பங்கன்திரு ஆலவாயான்
திருநீறே''

என்ற திருநீற்றுப்பதிகத்தை அருளிச் செய்த திருஞான சம்பந்தரின் சிறப்பை உலகம் நன்கறியும்; அந்த ஞானக் குழந்தை அம்மன்னருக்கு அளித்தது அந்தப் புண்ணியத்திருநீறு தானே?

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உயிர்த்தோழ ரான சேரமான் பெருமாள் நாயனார், ஓர் நாள் யானை யின் மீது அமர்ந்து நகர் வலம் வரும்பொழுது, வண்ணான் ஒருவன் உவர்மண் பொதியைச் சுமந்து கொண்டு எதிரேவர, அன்று அதற்கு சற்று நேரத்திற்கு முன் பெய்த மழையின் காரணத்தால், உவர்மண் கரைந்து அதனால் அவன் உடல்முழுவதும் வெளுத் துத்தோன்ற அதனை முழுநீறு பூசிய திருவேட மென்று கண்டு உடனே யானையினின்று கீழிறங்கி விரைந்து சென்று வணங்கி நின்றதைப் பெரியபுராணம் கூறுகின்றது.

இவ்வாறு சேரமன்னன் வணங்கி நிற்கக்கண்ட வண்ணான் தனது உள்ளம் மிகவும் கலங்கி, உடல் நடுங்கி அச்சம் பெரிதும் அடைந்து அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ''அடியேனை யார் என்று கொண்டீர்! அபசாரம் அபசாரம்! அடியேன் அடிவண்ணான் அன்றோ?'' என அவன் தன்னை இன் னார் என்று அறிமுகப்படுத்தியபொழுதும், அச்சேர பெருமான் இலட்சியம் செய்யாமல் அடக்கத்துடன் ''அடியேனும் அடிச்சேரன் அன்றோ! நீவிர் இப்போது திருநீற்றின் அன்பு வேடத்தை அறிமுகப்படுத்தினீர். இனி வருந்தாது ஏகுவீராக'' என்று அருள் செய்த சேர மான் பெருமான் நாயனாரின் திருநீற்றுப் பக்தியை என்னவென்று இயம்புவது?

அரிமர்த்தன பாண்டியன் அமைச்சராகியோர் சூழ ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறான். அச்சமயம் குதிரைக் காப்பாளன் அவையில் நுழைந்து மன்ன னைப் பணிந்து ''மன்னர் மன்னா! நமது குதிரைப் படையில் இறந்தவை போக எஞ்சியுள்ளகுதிரைகள் நெடிது மூப்பினையுடையனவாயும், நோய்வாய்ப் பட்டனவாயும் உள்ளன. ஒரு குதிரையும் நல்ல நிலையில் இல்லை என்று சொல்லக் கேட்ட மன்னன் முதலமைச்சராகிய 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டப்பெயருடைய திருவாதவூரரை நோக்கி, ''நமது கருவூலத்தைத் திறந்து வேண்டியபொருளை எடுத்துச்சென்று கீழ்க்கடல் துறையில் வந்திறங்கும் குதிரைகளுள் நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து வாங்கி வாரும்'' என்று கட்டளையிட, திருவாதவூரரும் நிதி யறையைத் திறந்து வேண்டு மட்டும் பொருளை எடுத்து ஒட்டகத்தின் மீது அனுப்பிவிட்டு, அதன் பின் அங்கயற்கண்ணி அம்மையாரின் ஆலயத்தை அடைந்து பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி எழுந்து, சித்தி விநாயகரை சேவித்து, அன்னை தேவியின் திருவடிக்கமலங்களை அஞ்சலி செய்து, அப்பன் திருமுன்னே சென்று உச்சிமேல் கையிரண்டும் வணங்கித் தொழுது,

''இப்பொருள் உமக்கும் உம் அருள் பெற்ற அன்பருக்கும் ஆக்குவீராக! இஃது அடியே துடைய உள்ளக்கிடக்கையாகும்'' என்று வேண்டி நிற்க,

''ஆதிசைவனாம் அர்ச்சகன் ஒருவன் நேரணைந்து
பூதியீந்தனன்; நமக்கிது போலிலை நிமித்தம்
இஃது நன்னெறிக்கு ஏதுவென்று இருகையேந்தி
அணிந்து
வேதநாதனை யிறைஞ்சினர் விடைகொடு
மீண்டார்''

- திருவிளையாடற்புராணம்

ஆதிசைவராகிய அர்ச்சகர் ஒருவர், குறை யிரந்து நிற்கும் திருவாதவூரரின் முன்வந்து, விபூதியை வழங்கியபோது, வாதவூரர் அகமிக மகிழ்ந்து நமக்கு இதனினும் நன்னிமித்தம் (சுப சகுனம்) வேறொன்றுமில்லை என்றும், ஆண்டவ னுடைய அருள் நெறியை அடைவதற்கு இதுவும் ஒரு காரணமென்றும், தமது இதயத்தில் எண்ணி எண்ணி இன்புற்று இருகரங்களாலும், அவ்வெண் ணீற்றை ஏற்றுத் தம் உடல் முழுதும் அணிந்து கொண்டு

வேதநாயகனை வணங்கி விடைபெற்று மீண்டும் சென்றார்.

இத்தகைய வரலாற்றுண்மைகளால் விபூதி யானது நல்ல நிமித்தத்திற்கும், இறைவன் திருவருளை இனிதுபெறுவதற்கும் ஏற்றதொரு இன்பசாதனமாகும் என்பதையும் திருவாதவூரடிகள் திருவருள் வாக் கால் மிகத் தெளிவாக அறிகிறோம்.

### விபூதி தயாரிக்கும் முறை

மந்திரங்களை முறைப்படி உச்சரித்துப் பசு வின் சாணத்தை எரித்து திருநீறு தயாரிக்கப்படு கிறது. திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூன்று வகைப்படும்.

### கற்பம்

வியாதியில்லாத கன்றுடன் கூடிய பசுவின் சாணத்தைப் பூமியில் விழாமல் தாமரைஇலையில் ஏற்றுப் பால், தயிர், நெய், கோமயம் ஆகியவற்றைச் சேர்த்து சிவமந்திரங்களைச் சொல்லி, சிவாக்கினி யில் எரிந்து எடுப்பது கற்பவிபூதி எனப்படும்.

### அநுகற்பம்

காடுகளில் கிடைக்கும் பசுஞ் சாணங்களைச் சேகரித்துப் பொடியாக்கி கோசலத்தால் நன்றாகப் பிசைந்து சுத்தி செய்து மந்திரத்தால் உருண்டை யாகச் செய்து ஹோம நெருப்பிலிட்டு கட்டு எடுத்து வைப்பது அநுகற்ப விபூதி எனப்படும்.

### 3. உபகற்பம்

மாடுகள் இருக்கும் இடங்களிலும், மாட்டுத் தொழுவங்களிலும் கிடக்கும் சாணத்தையும், காட் டுத் தீயினால் வெந்த சாணத்தையும் இவைகளைத் தனித்தனியே உருண்டையாகச்செய்து மடத்தி லுள்ள சிவாக்கினியில் எரித்து எடுப்பது உபகற்ப விபூதி எனப்படும்.

### விபூதி வைக்கும் விதி

விபூதியைத் தயார் செய்து வஸ்திரகாஷாயம் செய்து புதுமண் பாண்டங்களில் வைத்து, விபூதி காயத்திரி மந்திரத்தை உச்சரித்து, அதனுள் மல்லிகை, முல்லை, பாதிரி, செண்பகம், துளசி, கதிர்பச்சை ஆகிய மலர்களைக் கலந்து சத்யோஜாத மந்திரத்தைக் கூறி வைக்கவேண்டும்.

## அண்ணாமலையார் தீபம்

அன்னம் அளிக்கு தீபம்

அண்டினரை ஆதரித்துப்

பொன்னும் அளிக்குதீபம்

பொற்றீபம் — மன்னும்

அராவணிநேர் காட்டுமெங்கள்

அண்ணா மலைமேல்

பராவரும் கார்த்திகைத் தீபம்

— கார்த்திகை தீப வெண்பா.

### விபூதி வாங்கும் விதி

விபூதியை ஆசாரியார்கள் அல்லது சிவனடி யார்கள் கொடுக்கும்போது அவர்களை விழுந்து வணங்கி எழுந்து கைகூப்பிக் கொண்டு இரண்டு கைகளில் விபூதியை வாங்கி அணியவேண்டும். அதன் பின்பு விபூதி கொடுத்தவரை முன்போலவே மீண்டும் வணங்குவது முறை. சிவிகை, குதிரை, ஆசனம், திண்ணை ஆகியவற்றில் இருந்து கொண்டு விபூதி வாங்குவது கூடாது. விபூதி கொடுப்பவர் கீழே நிற்க வாங்குபவர் மேலிருந்து வாங்குவது கூடாது. சிவபக்தி இல்லாதவர்களிடம் விபூதி வாங்கக்கூடாது.

### விபூதி தாரண வகைகள்

ஸ்நானம், திரிபுண்டரம், உத்தூளனம் என்ற விதங்களில் விபூதி தரிக்கவேண்டும். உடல் முழுவ தும் விபூதி பூசிக் கொள்வது விபூதி ஸ்நானம் ஆகும். தண்ணீரில் குளிக்க முடியாதபோதும், தண்ணீரில் குற்றம் நேர்ந்த காலத்திலும் விபூதியில் ஸ்நானம் மேற்கொள்ளப்படும். இதை ''ஆக்நேயம் பஸ்மஸ் நானம்'' என்று வேதம் சொல்கிறது. விபூதியை மூன்று பட்டையாக அணிவது திரிபுண்டரம் ஆகும். விபூதியை நீரில் குழைக்காமல் அப்படியே அணிவது உத்தூளனம் எனப்படும். தீட்சை பெற்றவர்கள் சுத்தமான நீரில் விபூதியைக் குழைத்து அணிவர். தீட்சை பெறாதவர் கள் நீரில் குழைக்காமல் அப்படியே அணியலாம்.

### விபூதி அணியும் இடங்களும் அளவுகளும்

நெற்றியில் கடைப்புருவ எல்லை வரையும், மார்பிலும், புஜங்களிலும் ஆறங்குல நீளமும், மற்ற இடங்களில் ஒவ்வோர் அங்குல நீளமும் விபூதியைத் தரிக்கவேண்டும். விபூதிக் கோடுகள் ஒன்றையொன்று தீண்டினாலும், மிகவும் அகன்றுஇருந்தாலும், வளைந்துஇருந்தாலும், இடைவெளி இல்லாமல்இருந்தாலும் குற்றமாகக் கருதப்படும். விதிக்கப்பட்ட அளவுக்கு விபூதியின் கோடுகள் குறைந்தால் ஆயுள் குறையும் என்றும், கூடினால் தவம் கெடும் என்றும் சொல்லப்படுகிறது. மூன்று குறியீடுகளின் இடைவெளி ஒவ்வோர் அங்குலம் இருக்கவேண்டும்.

### விபூதியை பதினாறு இடங்களில் அணியவேண்டும்

| | |
|---|---|
| 1. உச்சி | 2. நெற்றி |
| 3. மார்பு | 4. தொப்புள் |
| 5. முழந்தாள் (வலம்) | 6. முழந்தாள் (இடம்) |
| 7. தோள் (வலம்) | 8. தோள் (இடம்) |
| 9. முழங்கை (வலம்) | 10. முழங்கை (இடம்) |
| 11. மணிக்கட்டு (வலம்) | 12. மணிக்கட்டு (இடம்) |
| 13. செவி (வலம்) | 14. செவிகள் (இடம்) |
| 15. கழுத்தின் அடி | 16. முதுகுத்தண்டின் அடி |

இவ்வாறு அணிபவர்களுக்கு பதினாறு வகையான பேறுகள் கிடைக்கும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

அவை

| | |
|---|---|
| 1. ஒழுக்கம் | 2. அன்பு |
| 3. அருள் | 4. ஆசாரம் |
| 5. உபசாரம் | 6. உறவு |
| 7. சீலம் | 8. தவம் |
| 9. தானம் | 10. வந்தித்தல் |
| 11. வணங்கல் | 12. வாய்மை |
| 13. துறவு | 14. அடக்கம் |
| 15. அறிவு | 16. அருச்சித்தல் |

விபூதி அணியும்போது சொல்லவேண்டிய மந்திரங்களாவன:-

| | | |
|---|---|---|
| 1. | நெற்றியில் | ''பிரம்மனே நம'' |
| 2. | மார்பில் | ''ஹவ்ய வாகனாய நம'' |
| 3. | தொப்புள் | ''ஸ்கந்தாய நம'' |
| 4. | கழுத்தில் | ''விஷ்ணுவே நம'' |
| 5. | இரு தோள்களில் | ''சம்பவே நம'' |
| 6. | இரு நடுக்கைகளில் | ''பிரபஞ்ஜாய நம'' |
| 7. | இரு மணிக்கட்டுகளில் | ''வஸுப்பே நம'' |
| 8. | பின் மணிக்கட்டுகளில் | ''ஹரபே நம'' |
| 9. | தலையில் | ''பிரமாத்மனோ நம'' |

ஒவ்வொரு உறுப்புக்களில் அணியும் போதும் உரிய மந்திரங்களைச் செபித்து திருநீறு அணிவது நலம்.

### விபூதி அணிவதால் ஏற்படும் பயன்கள்

பிருஹத் ஜாபால உபநிடதம், பஸ்மஜாபால உபநிடதம், ஸ்வேதச்வதா உபநிடதம். ருத்ர காலாக்கினி உபநிடதம் முதலிய நூல்களில் திருநீற்றின் சிறப்புக்கள் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் கூறப்பெற்றுள்ளன.

விபூதி அணிவதால் அகந்தூய்மையும், புறந்தூய்மையும் வந்து சேரும். பேய்பிசாசுகள் நம்மை வந்து அணுகா. இப்பிறவியில் எல்லாச் செல்வங்களும் வந்துசேரும். பூசப் பூச மேனி தங்கநிறமாகும். வீடுபேறாகிய முத்தியும் கிடைக்கும்.

19-ம் நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து சென்ற இராமலிங்க அடிகளார் விபூதி அணிவதால் எவைஎவை கிடைக்கும் என்பதை ஒரு பாடல் மூலம் அருமையாகப் பாடியுள்ளார்.

''பாடற்கினிய வாக்களிக்கும்,
பாலும்சோறும் பரிந்தளிக்கும்.
கூடற்கினிய அடியவர்தம்
கூட்டளிக்கும்; குணமளிக்கும்;
ஆடற்கினிய நெஞ்சே நீஅஞ்சேல்
என்மேல் ஆணை கண்டாய்
தேடற்கினிய திருவளிக்கும்
''சிவாயநம'' என்றிடு நீறே''

- இராமலிங்க அடிகளார்.

மேலும் அப்பரடிகள்

''விடிவதுமே வெண்ணீற்றை மெய்யில்பூசி
வெந்தமைந்த நீரோடு கோவணமும்சுற்றி
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்''
கன்றாப்பூர் பதிகத்தில் பகர்ந்துள்ளார்.

''எவரேனும் தாமாக இலாடத்திட்ட
திருநீறும் சாதனமும் கண்டார் உள்குவர்''

- என்று அப்பர் பெருமான் விதந்தோதி உள்ளார்.

உயர்ந்த அறிவு அல்லது வித்தை என்பது திருநீறு அணிவதுதான் என்று உறுதியாகக் கூறுகிறார் அப்பர் பெருமான்.

''விச்சையாவதும் வேட்கையாவதும்
நிச்சல் நீறணிவார்களை நினைப்பதே''

- என்று பாடியுள்ளார்.

நம்மிடம் உள்ள நோய் நீங்க திருநீறு அணிவது அவசியம் என்கிறார் அப்பர்.

''அருநோய்கள் கெட வெண்ணீறு அணியாராகில்''

நெற்றியில் மூன்று கீற்றுக்களாக திருநீறு பூசி அதன்மேல் சந்திரன்போல சந்தனத்தாலோ அல்லது குங்குமத்தாலோ திலகம் இட்டுக்கொள் வது நல்ல பழக்கமாக இருந்தது என்கிறார் அப்பர் பெருமான்.

''தேய் பொடி வெள்ளைபூசி அதன் மேலே
திங்கள் திலகம் பதித்த நுதலர்''
-என்று பாடுகிறார்.

சிவபெருமானைப் பாடும்போது மயானத்துச் சாம்பலைப் பூசிய ''பாசுபத வேடத்தான்'' என்று பகர் கின்றார் அப்பர் அடிகள்.

''சவந்தாங்கு மயானத்துச் சாம்பல்
என்புதலையோடு மயிர்க் கயிறுதரித்தான்
தன்னை பவந்தாங்கு வேடத்தானை''
- என்று பாடுகிறார்.

விபூதி அணியும் முறை பற்றியும், பேணி அணிவதால் ஏற்படும் பயன்பற்றியும் குமரேச சதகம் என்ற நூலில் அருமையாகக் கூறியுள்ளார் அதன் ஆசிரியர்.

''பக்தியோடு சிவாசிவா என்று திருநீற்றை
பரிந்து கையால் எடுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியோடு
பருத்த புயமீது ஒழுக
நித்தமும் விரல்களால் நெறியில் அழுந்தல்ஊற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை அணுகாது தேகம் பரிசுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங்கே
சக்தியோடு நித்தம் விளை யாடுவன் முகத்திலே
தாண்டவம் செய்யும்திரு
சஞ்சலம் வராது பரகதி உதவும் இவரையே
சக்தியும் சிவன் எனலாம்
மத்தினைமேரு என வைத்து அமுதினைக் கடையும்
மால் மருகனான முருகா
மயிலேறி விளை யாடு குகனே புல்வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஔவைப்பிராட்டியார் நல்வழி என்ற நூலில் 24-வது பாடலில்

''ஆறில்லா ஊருக்கு அழகுபாழ், நீறில்லாநெற்றிபாழ்
நெய்யில்லா உண்டிபாழ் மாறில் உடன்பிறப்
பில்லா மனைபாழ்''

என்று பாடி திருநீறு இல்லாத நெற்றிஅழகிழந்து காணப்பெறும் என்கிறார்.

இத்திருநீறு மெய்யன்பர்களாகிய நமக்கு துன்பங்கள், வியாதிகள், வராமல் கவசம் போல, நம்மைக் காக்கும் என்கிறார் பத்தாம் திருமுறையாம் ''திருமந்திரம்'' என்னும் கருத்துக் கருவலத்தைத் தந்த திருமூலர் பெருமான்.

''கங்காளன் பூசுங்கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே''
- என்று அருளிஉள்ளார்.

போர்க்களத்தில் நின்று போரிடும் வீரர்கள் மேல் ஆயுதங்கள் பட்டுவிடாமல் காக்கும் கவசம் போன்று, பக்தர்களுக்கு துன்பங்கள், கஷ்டங்கள், நோய்கள் வராமல் கவசம் போல் காப்பது திருநீறே ஆகும் என்பதில் எள்ளளவும் ஐயுமில்லை.

**தரிக்கக் கூடாதவை**

ஒருகையால் வாங்கிய விபூதி, சிவதீட்சை பெறாதவர் கொடுத்த விபூதி, கருநிறம், செந்நிறம், புகைநிறம் உடைய விபூதிகளை அணியக்கூடாது.

**உட்கொள்ளும் மருந்து**

மருந்தாகவும் உட்கொள்ளும் மேன்மை விபூதிக்கு உண்டு. உட்கொள்ளும் விபூதி உடல் அசுத்தங்களைப் போக்கி, எழுபத்திரண்டாயிரம் நாடிகளுக்கு வன்மை உண்டாக்கும் அருமருந்து என்பர் பெரியோர்.


**நிறைவுரை**

ஆலயங்களில் தரும் விபூதியை கீழே சிந்தக் கூடாது, அவற்றை முறையாக அணிந்த பின், காலால் மிதிபடாது எஞ்சிய விபூதியை அதற்கென வைக்கப்பட் டுள்ள பாத்திரங்களில் இடவும். இல்லையேல் காகிதங் களில் பொட்டலமிட்டு, வீட்டிற்கு கொண்டுவந்து வீட்டிலுள்ளோர் அனைவரும் அணிவதற்குக் கொடுக் கலாம். மேன்மை பொருந்திய எல்லாந்தரும் விபூதியை உதாசீனம் செய்யாமல், முறையாக அணிந்து இம்மை, மறுமைப் பேறுகளை எய்து வோமாக.

★★★

# பொதட்டூர் வாழும் பெருமான்

- கவிஞர் ச.க. ஏகாம்பரம், எம்.ஏ.பி.எட்.



*பேர்படைத்த நல்ல பொதட்டூர் உறைகின்றான்*
*சீர்படைத்த சீலன் சிவமைந்தன் - கூர்வேலால்*
*மார்துளைத்து இன்னல் களைந்தவன் சேர்த்திடுவான்*
*சீர்தருமாம் நல்ல சிறப்பு.*

*சரவணப் பொய்கையில் சண்முகாநீ தோன்றி*
*பெருமைகள் பெற்றாய் பெரிதும் - அரவணைத்து*
*அன்பால் அமுதூட்டும் அன்னைபோல் நீயிருந்து*
*என்பால் எழுந்தருள்வாய் இன்று.*

*செந்தில் முருகனை செல்வக் குமரனை*
*சிந்தித் திருந்தால் சிறப்போங்கும் - கந்தனை*
*எந்தநாளும் போற்றுவார்க்கு எல்லா நலன்களையும்*
*சொந்தமாக்கிச் சேர்ப்பான் சுகம்.*

*வாழ்வார் குமரன் வடிவத்தைக் காண்பவர்*
*வாழ்வார் முருகன்தாள் வாழ்த்துபவர் - வாழ்வினில்*
*சூழ்ந்திருக்கும் தீமையை சுப்ரமண்யன் தீர்த்தருளி*
*வாழ்வுக்கும் சேர்ப்பான் வளம்.*

*வாயார வாழ்த்தியே வாழ்வோர்க்கு வாழ்வினில்*
*நோயில்லா வாழ்வை நயந்தளிப்பான் - நாளெல்லாம்*
*நன்மை நயந்தளிக்கும் நாயகன் நல்லருளால்*
*துன்பம் விலகும் தொலைந்து.*

* * *

# நலம் தரும் எட்டெழுத்து மந்திரம்

- விஷ்ணுதாசன் எஸ். சுந்தரம்

எம்பெருமானை நேரில் கண்டு அவனுடைய ஸ்வரூப ரூப குணங்களை அனுபவித்து அழகுத் தமிழால் பாடிய பாசுரங்களின் தொகுப்பே நாலாயிரத் திவ்யப் பிரபந்தம். இது எம்பெருமானைப்பற்றி தெரிவிக்கும் யாவற்றினுள்ளும் தலை சிறந்தது. இந்த நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களை அருளிச் செய்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். இவர்கள் ஸ்ரீ மந் நாராயணனின் திருவருளால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள். தித்திக்கும் தேன்பாகு போன்றவை இவர்களுடைய பாசுரங்கள். இவர்களுள் திருமங்கையாழ்வாரே அதிக பாசுரங்களை பாடியவர். இவர் நாற்பது திவ்ய தேசங்களுக்குச் சென்று எம்பெருமானை வழிபட்டு 1361 பாசுரங்களை அருளிச் செய்துள்ளார். இவருடைய பாசுரங்களின் சாராம்சம் நமக்கு உற்ற துணையாக வழிகாட்டியாக, ஒளி விளக்காக அமைந்துள்ளது.

ஐம்புலன்களில் ஒன்றான வாயினால் நல்ல சொற்களே வர வேண்டும் என்று திருமங்கையாழ்வார் கூறும் பாங்கு நாம் வாழ்வதற்கு ஒரு திருப்புமுனை என்று சொல்லலாம். நல்ல சொல் எது? அதுதான் நாராயணா என்னும் திருநாமம். அதுதான் நலம் தரும் சொல். இது அஷ்டாச்சரம் என்ற எட்டெழுத்து மந்திரமாகும். ''நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம்'' என்கிறார். அவர் அந்த திவ்ய நாமத்தை எப்படி கண்டு கொண்டார் என்று பார்ப்போம்.

பரகாலன் என்ற திருமங்கை மன்னன் குமுதவல்லி என்ற கன்னியின் மீது மையல் கொண்டு அவளது தந்தையிடம் சென்று குமுத வல்லியை தனக்கு மணம் முடித்துதரக் கேட்கிறான். தந்தையார் அதற்கு இசைந்து குமுதவல்லியின் சம்மதத்தைக் கேட்கிறார். அவள் ஒரு நிபந்தனை விதிக்கிறாள். தினமும் ஆயிரத்தெட்டு வைணவ அடியார்களுக்கு உணவளித்து அவர்களுடைய பாத தீர்த்தமும், தளிகை பிரசாதத்தையும் உட்கொள்ள வேண்டும் என்கிறாள். காதலின் மிகுதியால் அதற்கு இசைகின்றான். திருமணம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. தான் கொடுத்த உறுதி மொழிப்படி மங்கை மன்னன் தினந்தோறும் ஆயிரத்தெட்டு வைணவ அடியார்களுக்கு உணவளித்து அவர்களுடைய பாத தீர்த்தத்தையும், தளிகை பிரசாதத்தையும் உட்கொண்டு ஆராதித்து வந்தான். நாளடைவில் அதையே தன் வழக்கமாகக் கொண்டான்.

தம்மிடமிருந்த பணம் அனைத்தையும் அடியார்களுக்கே செலவு செய்துவிட்டதால் மேற்கொண்டு உணவளிக்க பணம் பொருள் இல்லாமையால் வேறு வழியின்றி வழிப்பறி செய்தாகிலும் தம் தொண்டு தொடர வேண்டும் என்று கருதி காட்டு வழிகளில் பதுங்கியிருந்து அவ்வழியே வரும் பெரிய தனவந்தர்களைக் கொள்ளையடித்து அதைக் கொண்டு வைணவ அடியார்களுக்கு உணவளித்து வந்தான்.

இவனை ஆட்கொண்டு அருள முடிவு செய்த எம்பெருமான் தன்னையும் வழிப்பறிக்குமாறு செய்ய, தானும் பிராட்டியுமாய் புதுமணத்தம்பதிகள் போல வேடம் பூண்டு, ஆடை, ஆபரணங்களை நிறைய அணிந்து கொண்டு இவன் பதுங்கியிருக்கும் வழியே வந்தார்கள். இவர்களைக் கண்ட பரகாலன் இவர்களை வளைத்து அனைத்து பொருள்களையும் கைப்பற்றினான். ஆனால் பிராட்டியின் கால் விரல்களிலிருந்த மிஞ்சை மட்டும் கழற்ற முடியாமல் தன் பற்களைக் கொண்டு கடித்துக் கழற்றினான்.

கொள்ளையடித்த பொருட்களை மூட்டையாகக் கட்டித் தூக்க முயற்சிசெய்தான். அவனால் அம்மூட்டையை அசைக்கக்கூட முடியவில்லை. வியப்புற்ற பரகாலன் மணமகன் வேடம் பூண்ட எம்பெருமானை நோக்கி, இந்த மூட்டையை எடுக்க முடியாமல் என்ன மந்திரம் செய்தாய்? அதை எனக்குச் சொல் என்று தன் கைவாளைக் காட்டி அச்சுறுத்த உலக நாயகனான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் சிரித்தவாறே ''அன்பனே! வாரும்! உமக்கு அந்த மந்திரத்தைச் சொல்கிறேன்'' என்று அருகில் அழைத்து மந்திரங்களுக்கெல்லாம் தலையான மந்திரமான திரு வஷ்டாச்க்ஷர மஹாமந்திரத்தை இவனுடைய செவியிலே உபதேசித்து உடனே கருட வாகனத்தில் காட்சி கொடுத்தார்.

மண மக்களாக வந்தவர்கள் வேறுயாரும் இல்லை. ஸ்ரீமந் நாராயணனும் பிராட்டியுமே என்பதை உணர்ந்த பரகாலன் தமக்கு உபதேசம் செய்யப்பட்ட திருமந்திரச் சொல், நலம் தரும் சொல்; அதுதான் நாராயணா என்ற நல்ல சொல் என்று

அகமகிழ்ந்து ''வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்'' என்ற பாசுரத்திலிருந்து வரிசையாக பத்து பாசுரங்களைப் பாடி ஒவ்வொரு பாசுரங்களின் நிறைவில் ''நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம்'' என்ற எட்டெழுத்து மந்திரச் சொல்லைக் கண்டு கொண்டதாக ஆனந்த நடனமாடுகிறார்.

வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்; கூடி இளையவர் - தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி உய்வது ஓர் பொருளால்
உணர்வு எனும் பெரும் பதம் திரிந்து
நாடினேன், நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

காலமெல்லாம் வாடி வருந்தி துன்பப்பட்டு சிற்றின்பமே பேரின்பமெனக் கருதிய என்னை திருத்த எண்ணிய எம்பெருமானின் திருவருளால் நாராயணா என்னும் திருமந்திரத்தை நான் கண்டு கொண்டேன் என்கிறார்.

சிற்றின்பத்தையே பெரிதாக எண்ணி பல நாட்களாக என் வாழ்நாளை வீணாக்கிவிட்டேன்; நல்வினைகள் செய்யாமல் தீய வினைகளை செய்து அந்த நாள்கள் எல்லாம் ஊமை கண்ட கனவு போல வீணாகி என்மனம் அலைபாயத் தொடங்கியது. கள்வனாகிப் பற்பல தீமைகளை செய்து மனம் போன படி அலைந்து திரிந்து உழன்று விட்டேன். அறிவு தரும் ஞான நூல்களை கற்காமல் ஐம்புல வேட்கைக்கு ஆளான என்னைத் திருத்தி நல்வழிப்படுத்திய என் இறைவனும், உலகிற்கு தலைவனும், என் உள்ளத்தில் நீங்காதவனுமாகிய எம்பெருமானின் திருப்பெயராகிய நாராயணா என்ற திருநாம மந்திரத்தை நான் கண்டு கொண்டேன் என்கிறார் திருமங்கையாழ்வார்.

''குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.''

சொல்லிலே நலம் தருகின்ற நல்ல சொல்லையே சொல்ல வேண்டும். அவ்வாறு சொன்னால் நல்ல குடிப்பிறப்பும் நீங்காத நற் செல்வங்களும், நல்ல உயர்ந்த பதவிகளும், நல்ல நலன்களும் கிடைக்கும். நமது துயர் யாவும் தூசு போலப் பறந்து விடும். இதே கருத்தை தான் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாள் ஆண்டாள் தமது திருப்பாவையில்

"வாயினாற் பாடி மனதினால் சிந்திக்க
போய பிழையும் புகு தருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்''

என்று கூறுகிறாள். அதாவது நல்ல சொல்லான நாராயணா என்னும் நாமத்தைச் சொன்னால் துயர் நீங்கும்.

அத்தகைய நன்மை தருகின்ற நல்ல சொல்லான ''ஓம் நமோ நாராயணாய'' என்ற மந்திரச் சொல்லை நான் கண்டு கொண்டேன் என்று கூறும் திருமங்கை யாழ்வாரின் பாங்கு நம் வாழ்விற்கு ஒரு திருப்புமுனை என்று சொல்லலாம்.

ஸ்ரீமந் நாராயணனை வணங்கினால், அவனது நாமத்தைச் சொன்னால் அனைத்து ஐஸ்வர்யங்களும் உண்டாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இதே கருத்தை தான் அபிராமி அந்தாதியில் அபிராமி பட்டர்

தனம் தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும், பூங்குழலாள்
அபிராமி கடைக் கண்களே

என்று பாடியுள்ளார்.


ஐஸ்வர்யம், தனம், சந்தோஷம், தெய்வீக அழகு, வஞ்சம் இல்லாத மனம், மற்றும் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்து அருள்வாள் அபிராமி என்கிறார்.

ஸ்ரீமந் நாராயணனை பேராயிரமுடையான் என்று கூறுவர். அவனுடைய எண்ணற்ற திருநாமங்களில் ''ஓம் நமோ நாராயணா'' என்ற திருநாமமே மிக உயர்ந்தது.

நாமும் நலந்தரும் சொல்லான ஸ்ரீமந் நாராயணா என்று இறைவனின் நாமத்தை இடைவிடாமல் ஜபித்து இன்ப நிலை எய்துவோமாக!

# எல்லாம் நாராயணனே

- கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்



நாராயணா, நாராயணா நாராயணா,
எல்லாம் நீ நாராயணா நாராயணா,

எழுமலை தாண்டிநீயும் நாராயணா,
ஏன்தனியாய் நின்றாயோ நாராயணா!
ஏழுமலை தாண்டிவந்து, நாராயணா,
இவ்வுலகோர் வணங்கிடவோ நாராயணா! (1)

கேட்பதெலாம் கொடுத்திடுவாய் நாராயணா,
கேட்டுநீயும் வாங்கிடுவாய் நாராயணா!
ஆட்டுவிக்கும் ஐந்துபூதம் நாராயணா,
அடங்கவைத்தாய் என்னுடலில் நாராயணா! (2)

உன்னையேநான் அறியவந்தேன் நாராயணா,
என்னைநீயே அறியவைத்தாய் நாராயணா!
என்னாத்மா நீயானாய் நாராயணா,
எண்ணமெலாம் நாராயணா, நாராயணா! (3)

காலையிலே கண்விழித்தால் நாராயணா,
கண்முன்னே நீவருவாய் நாராயணா!
மாலையிலே கண்ணுறங்க நாராயணா,
மனமெல்லாம் நிரம்பிடுவாய் நாராயணா! (4)

நாவினிலே குடியிருப்பாய் நாராயணா,
நான்பேசும் பேச்செல்லாம் நாராயணா!
பாவினிலே பரவிவரும் நாராயணா,
உயிர் மூச்சில் உறைகின்றாய் நாராயணா! (5)

உண்ணாமல் பசிபோக்கும் நாராயணா
உறங்காமல் களைதீர்க்கும் நாராயணா!
எண்ணங்களின் இடைவெளியில் நாராயணா,
இருக்கும்உனைக் கண்டுகொண்டேன் நாராயணா!
(6)

நான்காணும் காட்சியெலாம் நாராயணா,
நன்மையன்றி தீமையில்லை நாராயணா!
ஊன்இருந்தும், நோயில்லை நாராயணா,
உண்மையன்றிப் பொய்மையில்லை நாராயணா! (7)

அன்பொன்றால் அரசாளும் நாராயணா,
அருள்ஒன்றால் வளமளிக்கும் நாராயணா!
இன்பமின்றி துன்பமில்லை நாராயணா,
இவ்வுலகைச் சொர்க்கமாக்கும் நாராயணா! (8)

உள்மனதைப் பேச வைக்கும் நாராயணா,
உணர்ந்தோரை உய்யவைக்கும் நாராயணா!
கள்ளமனம் இல்லையினி நாராயணா,
கண்டுகொண்டால் துன்பமில்லை நாராயணா! (9)

காலம்வெல் லுமந்திரமே நாராயணா,
காலனையும், ஓடவைக்கும் நாராயணா;
மூலமில்லை முடிவுமில்லை நாராயணா,
எங்கும் நீ நாராயணா நாராயணா.

நாராயணா நாராயணா நாராயணா
எல்லாம் நீ நாராயணா நாராயணா

★★★

# வள்ளுவர் முதலிடம் தரும் பண்பு

– புலவர் என்.டி. சிவலிங்கம், எம்.ஏ., பி.எட்.

*1. அன்பு :* உன்னத இலட்சியம் உடைமையும் அதற்காகவே உயிர் வாழ்வதும் சான்றாண்மையின் இலட்சணம் சான்றாண்மையைத் தாங்கும் ஐந்து தூண்களில் ஒரு தூண் அன்பு.

*2. அறச்செயல்:* அன்பினின்றும் பிறக்கிறது மனச்சான்று. அனைத்து மனிதரிடத்தும் அன்பு செலுத்துவதே அறச்செயல் விருப்பமாகும்.

*3. ஆன்றோர் சொல் :* அன்பே இறைவனது திருவுருவம் என்று எல்லாச் சமயங்களும் கூறும். எனவே அன்பு வடிவமாகிய இறைவனை அடைவதற்கு அன்பே சிறந்த வழி என்பர் ஆன்றோர்.

*4. அறிவுக்கு ஆதாரம் :* வெளிச்சத்துக்கு ஆதாரம் நெருப்பு என்பது போலவே அறிவுக்கு ஆதாரம் என்றுமே அன்புதான்.

*5. உயிர் வளர அன்பு தேவை :* அன்பு என்பது யாது? அது ஒருவகை மன உணர்ச்சியே ஆகும். தன்னை, அல்லாத பிற உயிர்களிடம் ஏற்படுகின்ற பரிவு, கருணை என்பவற்றையே அன்பு என்று கூறுகின்றோம். ஏனைய உணர்ச்சிகளைத் தாங்கியுள்ள மனதில் அன்பு உணர்ச்சி நிரம்பும் பொழுதுதான் மனிதன் மகாத்மா ஆகிறான். உலகில் பிறக்கும் எந்த உயிரும் வளர வேண்டுமானால் அன்பு என்ற ஒன்று தேவைப்படும்.

*6. அன்புக்கு முதலிடம் :* மக்களுக்கு இருக்க வேண்டிய குணங்களுள் அன்புக்கு வள்ளுவர் முதலிடம் தருகிறார்.

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்துசால் பூன்றிய தூண்' என்பது சான்றாகும் குறள்.

*7. மனிதனும் விலங்கும் :* பிறர் துன்பம் கண்டு கசிந்து கண்ணீர் விடும் இயல்பு மக்கள் வாழ்க்கையில் உண்டு. பிற உயிர்களாகிய விலங்கு பறவைகளுக்கு மற்ற உயிர்களின் துன்பம் கண்டு கண்ணீர் விடும் இயல்பு இல்லை.

*8. நடமாடும் எலும்புக்கூடு:* ஒருவனை உலகத்தோடு ஒட்டவைப்பது அன்பு. வையம் செழிப்பது அன்பால், வாழ்வை இயக்குவதே அன்பு உள்ளத்தின் ஆழத்தில் ஊற்றெடுக்கும் விலைமதிப்பற்ற இனிய உணர்ச்சியாக அன்பை உலக மக்களிடத்திலே செலுத்துபவனே உண்மையில் வாழ்பவன் ஆவான். அன்பு அகத்தில் இல்லாதவர் நடமாடும் எலும்புக் கூடுகளே ஆவர்.

*9. தமக்கென வாழார்ப்பண்பு:* அன்பற்றவர் தன்னல வெறியர், நீ எவ்வளவு கோபித்தாலும் நான் உன் நலம் அதையே நாடுவேன் என்ற அன்புள்ளம் படைத்தோர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.

*10. பிறர்க்குரியராகவே வாழ்பவர்:* அன்பிலார் வாழ்க்கை முற்றிலும் தமக்கே செலவழிந்து பயனற்றுப் போகும். அன்பு நிறைந்தவர்கள் உலகத்தின் செல்வம் ஆகிவிடுகிறார்கள், எல்லாப் பொருள்களும் பிறர் நன்மைக்காக இருப்பதாகக் கொள்வதுடன் தம் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத காரணமான உடம்பில் உள்ள எலும்பும் பிறர் நன்மைக்காகவே இருப்பதாகக் கருதுவார்கள். பிறருக்கு உரியராகவே வாழ்வார்கள்.

*11. மரம் ஆறு, சான்றோர்:* மரம் தனக்காகப் பழுப்பதில்லை. ஆறு தனக்காக ஓடுவததல்லை. சான்றோரும் தமக்காக வாழ்வதில்லை. சுயநலப் பற்றுள்ளவர்கள் பிறருக்கு எந்த விதமான நன்மைகளும் செய்வதில்லை.

*12. வள்ளுவர் காட்டும்வழி:* விலங்கு, மனிதன், தெய்வம் என்றே மூன்று நிலையில் உள்ளவர்களையும் இணைப்பது அன்பு ஒன்றுதான் என்பது உலக மனித இனத்திற்குப் பொதுவழிகாட்டிப் புது ஒளி ஊட்டியப் பொதுமறைப் பேராசான் திருவள்ளவர் காட்டும் வழி.

*13. வள்ளல் நிலை :* பிறருக்காக, பிற உயிர்கட்காகத் தம்முயிரைக் கொடுக்கும் நிலை, தியாக நிலை - வள்ளல் நிலை எனப்படும்

*14. சான்றுகள் :* இதற்கு நம் தமிழ் இலக்கியத்தில் பலசான்றுகளுண்டு. அவற்றை விடுத்து உலகில் பிறநாடுகளில் நடந்தவற்றுள் சில எடுத்துக் காட்டுகிறேன்.

*15. இருபதாம் நூற்றாண்டின் சிபி :* 15.6.1955ல் ஒக்லகாமா என்ற நகரத்தில் நடந்தது இது. மார்க்கரெட் தாமஸ் என்ற ஐந்து வயது நீக்ரோ இனப்பெண் ஆடையில் தீப்பிடித்துக் கன்னம் முதல் கால்வரையில் தீப்புண்ணால் வெந்து மிக்க துன்புற்றான். எவராவது தம்தோல் உதவி ஒட்டவைத்தால் அல்லது அவள் உயிர் வாழ் முடியாது என்ற நிலை. ஒரு வெள்ளைக் காரன் கருணையுடன் முன்வந்து தன்னுடைய தோலை வழங்கித் தியாகம் செய்து அவனைக் காப்பாற்றினான். இவனை இருபதாம் நூற்றாண்டு சிபி என்றால் என்ன?

*16. கண் உதவி :* ஜப்பானிலிருந்து ஒரு செய்தி. டோக்கியோ நகரத்தில் வாழ்ந்த மசாஜிரோ அசிதா என்ற தண்டனை பெற்ற பழைய குற்றவாளி தன் குடும்பத்தைப் பேண முடியாத அளவுக்கு வறுமையில் வாடினான். நான் வாழ முயற்சி செய்ய வேண்டுமானால் ஒரு குற்றத்தைச் செய்தாக வேண்டும். என்னுடைய கண்களை விற்றுவிடுங்கள்'' என்று மனைவிக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டடு தர்கொலை செய்து கொண்டான். இதனால் அவனது மனைவியும் சிறு குழந்தையும் வாழ முடியும். அவன் சிறப்புக்குப் பிறகு ஒரு மருத்துவ மனைவன் கண்களை வாங்கி அவனது விருப்பத்தை நிறைவு செய்தது இவற்றால் அன்புடையார் எறும்பாலும் பிறர்க்குரியராவர் என்பது தெளிவு.

# வினாவும் விளக்கமும்

– பருத்தியூர் முனைவர் K. சந்தானராமன், M.A., .Litt., Ph.D.

**வினா 33: 'குப்புசாமி' என்ற பெயர் எந்தக் கடவுளைக் குறிப்பிடுகிறது?**

**விளக்கம்:** சிவாலயத் திருவிழாக்களின் போது பஞ்சமூர்த்திகள் ஊரின் முக்கிய விதிகளில் மட்டும் உலாவாக வருவார்கள். பொதுவாகத் திருக்கோயிலைச் சுற்றியிருக்கும் நான்கு பெரிய விதிகளின் வழியேதான் உலா நடைபெறும். அன்றாடம் திருக்கோயிலுக்கு வர இயலாத முதியவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இறைவனின் திருவீதி உலா தரிசனம் செய்யும் வாய்ப்பை அளிக்கிறது.

அதுபோல் குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களும் இறைவனைத் தரிசிப்பதுடன் திருக்கோயில் வழிபாடுகளை தங்கள் பகுதியிலேயே கண்டு மகிழவும் ஒரு திருவிழா நடப்பதுண்டு. அதுதான் வனபோஜனத் திருவிழா.

சோலைகள் நிறைந்த ஊரெல்லைப் பகுதிகளுக்கும் இறைவன் எழுந்தருளி, காட்சி தரும் விழாதான் வனபோஜனத் திருவிழா.

அன்று இறைவன் அலங்காரங்களுடன் குடியைப் பகுதிக்கு எழுந்தருளுவார். அவருடன் அபிஷேக ஆராதனைகளுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் எடுத்துச் செல்வார்கள்.

உலாவாகச் சென்ற இறைவன் தற்காலிகமாக, அமைக்கப்படும் பந்தலில் இறங்குவார். அங்குக் கூடியிருக்கும் குடிசைவாசிகளின் முன்னிலையில் சிறப்பான அபிஷேக அலங்கார தீபாரதனைகள் நடைபெறும், திருக்கோயிலில் நடைபெறுவது போன்றே பதினாறு உபசாரங்களும் (சோடச உபசாரங்களும்) நடைபெறும்.

நகரத்தின் சந்தடிகளிலிருந்து விடுபட்டு, இயற்கைச் சூழிலில் சிலமணி நேரத்தைச் செலவிடும் நோக்கத்துடன் தற்காலத்தில் 'பிக்னிக்' என்ற சிறு சுற்றுலா மேற்கொள்கின்றனர். அதன் சின்னோடி இந்த வனபோஜன விழாதான்!

அடித்தளத்து மக்களின் இடத்திற்கே சென்று இறைவழிபாட்டின் நோக்கத்தையும் பயனையும் உணர்த்தும் வகையில் அமைகிறது இந்த வனபோஜன விழா.

சிவன், சக்தி முதலானோர் முக்கிய வீதிகளின் வழியே மட்டும் உலாவருகின்றனர். ஆனால் பல தெருக்களின் வழியே ஊர்க்கோடியில் இருக்கும் குப்பங்களுக்கும் சென்று வருபவர் முருகப் பெருமான் தான்!

வனபோஜன விழாவுக்காக குப்பத்துக்குச் செல்லும் முருகனை 'குப்பசாமி' என்று அழைத்து மகிழ்ந்தனர். அதுவே 'குப்புசாமி' என்றாகி விட்டது.

**வினா 34: ''தோள் கண்டார் தோளே கண்டார்'' என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலில் குறிப்பிடப்படும் 'ஊழ் கொண்ட சமயம்' என்பதன் விளக்கம் என்ன?**

**விளக்கம்:** இராமனின் திருமேனி அழகைக் கண்ட பெண்களின் நிலையை வருணிக்கும் அப்பாடல் வருமாறு:

> தோள் கண்டார் தோளே கண்டார்;
> தொடு கழற் கமலம் அன்ன
> தாள் கண்டார் தாளே கண்டார்;
> தடக்கை கண்டாரும் அஃதே;
> வாள் கொண்ட கண்ணார் யாரே
> வடிவினை முடியக் கண்டார்?
> ஊழ் கொண்ட சமயத் தன்னார்
> உருவு கண்டாரை ஒத்தார்.

மதநல்லிணக்கம் குறித்து அடிக்கடி பேசும் இக்கால மக்கள் அறிந்து சிந்தித்துப் பார்க்க வேண்டிய அரிய பாடல் இது. கம்பர் தாம் ஓர் 'உலகப் பெருங் கவிஞர்' என்ற முத்திரையை இப்பாடலில் பதித்துள்ளார்.

ஒருவர் தாம் பற்றி நின்ற சமய நெறியில் ஈடுபட்டவுடன் அதனை விட்டு வெளியே வந்து மற்ற சமயங்களின் சிறப்பைக் காண இயல்வதில்லை. தமது சமயத்தில் ஈடுபாடு கொள்ளும் கொள்கையைத் தட்டிக் கொடுத்து, அதே நேரத்தில் மற்ற நெறிகளின் உயர்ந்த கோட்பாடுகளை அறிந்து பாராட்ட மறுக்கும் பிடிவாதக்காரர்களை 'வாழைப் பழத்தில் ஊசி வைக்கும்' பாணியில் கண்டிக்கிறார் கம்பர்.

இராமனின் திருமேனி முடிமுதல் அடி வரை அனைத்தும் அழகுதான். அனைத்து அங்கங்களும் ஒன்றை ஒன்று விஞ்சும் அழகுபெற்றுள்ளன. எனினும் தோளைக் கண்டவள் கையைக் காண முயலாமல் தோளிலேயே லயித்து விட்டாள். மற்ற அங்கங்களைக் கண்டவர்களும் அப்படியே வைத்த கண் வாங்காமல் தாம் கண்ட ஓர் அங்கத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தனர்.

தோள் அழகில் மயங்கியவள் இராமனின் திருக்கைகள் அழகற்றவை என்று கூற முடியுமா? அல்லது திருவடி அழகில் மூழ்கியவள் திருத்தோள்கள் அழகற்றவை என்று கூறமுடியுமா?

உலகில் உள்ள அனைத்துச் சமயங்களுமே கடவுளின் (பரம்பொருளின்) அங்கங்கள் போன்றவை. அவை அனைத்தும் ஒன்றுக் கொன்று ஏற்றத் தாழ்வு அற்றவை. ஒன்றின் மீதுள்ள ஈடுபாட்டினால் மற்ற நெறிகளை உயர்வு அற்றவை என்று கூறலாமா?

நம்மைச் சிந்திக்க வைக்கிறார் கம்பர்

அவரவர் ஊழ்வினைப்படி - முன் வினைப்படி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்தில் பிறக்கின்றனர். அதே விதி அல்லது ஊழின்படி குறிப்பிட்ட சமயத்தில் பிறந்தவர் ஒருவருக்கும் மற்றொரு சமயத்தில் ஈடுபாடு ஏற்படலாம். வேலை (செய் தொழில்) அமைவதுபோல் – வாழ்க்கைத் துணை அமைவது போல் பற்றியொழுகும் சமய நெறியும் நமது ஊழ்வினைப் படியே அமைகிறது. ஆதலால் 'ஊழ் கொண்ட சமயத்தார்' என்றார் கம்பர்.

கம்பனில் ஆழ்வார்களின் சாயலும், தாக்கமும் அதிகம் உண்டு என்பதை அறிவோம். இப்பாடலிலும் அதே ஆழ்வார் சாயலைக் காணலாம். நம்மாழ்வார் தமது திருவாய் மொழியில்

அவரவர் தமதமது அறிவறிவகை வகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்;
அவரவர் இறையவர் குறைவிலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

ஒவ்வொருவரும் தாங்கள் அறிந்த வகையில் இறைவனைப் போற்றுகின்றனர். அவரவர் அறிந்து போற்றும் எந்தக் கடவுளும் குறையுடையவர் அல்லர் (குறைகள் மனிதருடையவை). அவரவர் விதியின் வழியே குறிப்பிட்ட நெறியைப் பின்பற்றுகின்றனர். இந்த திருவாய்மொழியின் கருத்தைக் கம்பனின் ''தோள்கண்டார்'' என்ற பாடலும் வலியுறுத்துகிறது.

''விதிவழி அடைய நின்றனர்'' என்ற ஆழ்வாரின் சொற்றொடர் கம்பராமாயணத்தில் ''ஊழ் கொண்ட சமயம்'' என்று வந்துள்ளது.

கிணற்றில் வாழும் தவளை வெளியில் ஆங்காங்கே இருக்கும் குளம், ஏரி, கடல் ஆகிய பெரிய நீர்ப்பரப்பை அறிவதில்லை. எடுத்துச் சொன்னாலும் அது நம்பிட மறுக்கிறது.

ஆன்மீக நெறி மாபெரும் கடல்போன்றது. நமது சகல அறிவும், அனுபவமும் மிகச்சிறியது.

இவ்வாறு தமது சிகாகோ மாநாட்டு உரையில் நினைவுபடுத்தினார் சுவாமி விவேகானந்தர்.

**வினா 35: 'அர்ச்சா மூர்த்தம்'' என்றால் என்ன? அதன் தனிச் சிறப்பு என்ன?**

*விளக்கம்:* வைணவ நெறியில் பகவானுக்கு உரிய ஐந்து நிலைகளைக் குறிப்பிடுகின்றனர்.

*1. பரமபதம்:* திருமால் உறையும் வைகுண்ட லோகத்தை 'பரமபதம்' என்பார்கள். ''தாமரைக் கண்ணன் உலகு'' என்ற குறிப்பு திருக்குறளில் உள்ளது.

முத்திநிலை எய்தியவர்கள் அடையும் வைகுண்டம் என்ற பரமபதத்திற்குச் சென்று திருமாலை தரிசிக்க பூவுலக மக்கள் எளிதில் விரும்பமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பூவுலகில் நெடுங்காலம் வாழவே விரும்புகின்றனர்.

*2. திருப்பாற்கடல்:* இது திருமால் பாம்பணையில் பள்ளிகொள்ளும் இடம். நாரதர் முதலான முனிவர்களும், தேவர்களும் அங்குச் சென்று பெருமாளைத் தரிசிக்க இயலும்.

*3. அவதாரம்:* 'அவதாரம்' என்றால் கீழே இறங்கி வருதல் என்று பொருள். மேலே இருக்கும் பெருமான் யுகந்தோறும் தீமையை அழித்துத் தருமத்தைக் காப்பதற்காக அவதாரங்கள் எடுக்கிறான். அப்போதெல்லாம் பூவுலக மக்களுடன் பெருமாள் கலந்து பழகுகிறான். அது அவனது எளிவந்த தன்மை அல்லது 'சௌலப்யம்' என்று போற்றப்படுகிறது. அவதாரமெடுத்து அந்த பெருமானைக் காணும் வாய்ப்பு சமகாலத்தில் வாழ்ந்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. தசரதன், வசிஷ்டர், குகன், சபரி போன்ற பலருக்கு இராமனின் தரிசனம் கிடைத்தது. கலந்து பழகவும் முடிந்தது. கிருஷ்ணாவதார காலத்தில் பாண்டவர் குந்தி, விதுரர், குசேலர், ஆயர்குலத்தோர் போன்ற பலருக்கும் அவ்வாய்ப்புக் கிடைத்தது.

*4. அந்தர்யாமி :* அனைவருள்ளும் பெருமான் இருக்கிறான். என்றாலும் மகான்களும், யோகிகளும் மட்டுமே அவனைத் தம்முள்ளே உணரவும் அறியவும் முடிகிறது. ஊனுடம்பில் உத்தமனாகிய இறைவன் இருப்பதை உணர்ந்தார் திருமூலர். எனவே, அவனிருக்கும் ஊனுடம்பையும் கோயிலாகப் பாதுகாக்க வேண்டுமென்று உரைத்தார்.

*5. அர்ச்சா மூர்த்தம்:* எல்லாக் காலத்திலும், அனைவராலும் எளிதில் தரிசித்துப் போற்றிப் புகழ்ந்து மகிழ வகை செய்யும் திருவுருவ வழிபாடே ஏற்றதாகும். நாம் எளிதில் வழிபடத்தக்க வகையில் இறைவன் கற்சிலைகளிலும், செப்புத்திருமேனிகளிலும், பஞ்லோகப் படிமங்களிலும் குடிகொண்டு அருள் பாலிக்கிறான். அத்தகைய வழிபாட்டு வடிவங்களே 'அர்ச்சாமூர்த்தம்' எனப்படும். எளிய, புறவழிபாட்டு முறையில் பாமரமக்களும் அர்ச்சாமூர்த்தத்தை வழிபடலாகும். எல்லாக் காலத்திலும் எண்ணற்ற திருக்கோயில்கள் இருந்து வந்திருக்கின்றன. இன்றும் தொடர்ந்து மேல்நாடுகளிலும் அர்ச்சாமூர்த்தத் திருமேனிகள் புதிய திருக்கோயில்களில் நிறுவப்பட்டு வருகின்றன. மக்கள் கூடிவாழும் 'சமூக உணர்வு' என்ற உயர்ந்த கோட்பாட்டின் பிறப்பிடம் திருக்கோயில்களே! என்பது சமூகவியல் அறிஞர்களின் கருத்து.

# எது சரியான விடை?

- தொகுத்தவர் அ. நிறைமதி

இன்று தொலைக்காட்சிகள் பலவற்றிலும் பொது அறிவு வினா விடை நிகழ்ச்சிகளைப் பிரபலங்கள் நடத்தி அதில் பங்கு பெற்றுப் பதிலைத் திறம்பட உரைப்பவர்களுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் பரிசாக வழங்கி வருகின்றனர். அன்றாட வாழ்விற்குப் பயன்படாத பலதுறை வினா - விடைகளை இதற்கென மக்கள் பயின்று நினைவில் வைத்துக் கொள்ள இயலாமல், அல்லற்பட்டு வருகின்றனர்.

பணமே குறிக்கோளாக நிகழ்த்தப்பட்டு வரும் இத்தகைய வினா - விடை நிகழ்ச்சிகள் மிகச்சிலருக்கே நன்மை தரும்; மிகப் பலருக்குத் துன்பமே மிகும். இவ்வாறு இன்றி நம் வாழ்விற்கு அன்றாடம் பயன் தரும் வகையில் நம் சமயச் சான்றோர்கள் தாம் அருளிச் செய்துள்ள சமய நூல்களில் அமிழ்தனைய ஆயிரமாயிரம் அரிய கருத்துகளை வழங்கிச் சென்றுள்ளனர்.

அவற்றை எல்லாம் நம் மக்கள் அறிந்து கொள்வார்கள் ஆனால், வாழ்க்கையின் குறிக்கோள் அறிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் ''கோடீஸ்வரர்களாக''த் திகழ்வார்கள் என்பது திண்ணம். அவ்வகையில் நம் மக்கள் அனைவருக்கும் பயன்படக் கூடிய சுவையான வினா - விடை நிகழ்ச்சி இம்மாதம் முதலாகத் ''திருக்கோயில்'' இதழில் தொகுத்து வழங்கப்படுகின்றது.

இதனை நம் வாசகர்கள் அனைவரும் படித்துப் பயன்பெறலாம். பங்குபெற வாய்ப்பு நேருமா நேராதா? பங்கு பெற்றாலும் வெற்றி கிட்டுமா கிட்டாதா? என்பன போன்ற மன உளைச்சல் இன்றி இவ்வினா - விடை நிகழ்ச்சியை அனைவரும் பயின்று, அவற்றை வாழ்விற்குத் துணை கொண்டு, இசைமிக வாழலாம்.

''எது சரியான விடை?'' எனும் இத் தொடரைத் தொடர்ந்து படித்துப் பயன்பெற ''திருக்கோயில்'' வாசகர்களை அன்புடன் வேண்டி வரவேற்கின்றோம்.

**வினா எண் 1.**

**''குறிக்கோள் இலாது கெட்டேன்?'' என்று பாடி ஒவ்வொருவரும் குறிக்கோளுடன் வாழ அறிவுறுத்திய சான்றோர் இவர்களில் யார்?**

அ) தொல்காப்பியர்

ஆ) அகத்தியர்

இ) அருணகிரிநாதர்

ஈ) அப்பரடிகள்.

**வினா 2:**

**''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' என்று பாடிய சான்றோர் இவர்களில் யார்?**

அ) திருஞானசம்பந்தர்

ஆ) திருநாவுக்கரசர்

இ) ஆண்டாள்

ஈ) பட்டினத்தார்.

**வினா : 3**

**''ஒன்றேகுலம் ஒருவனே தேவன்'' என்ற பொன்மொழி இவர்களில் யாருடையது?**

அ) இராமலிங்க சுவாமிகள்

ஆ) தாயுமான சுவாமிகள்

இ) திருமூலர்

ஈ) மாணிக்கவாசகர்.

**வினா 4:**

**''திரு முருகாற்றுப்படை'' எனும் இலக்கியத்தைப் பாடிய சான்றோர் இவர்களில் யார்?**

அ) தேவராய சுவாமிகள்

ஆ) குமரகுருபரர்

இ) பாம்பன் சுவாமிகள்

ஈ) நக்கீரர்.

வினா 5:

முதலை உண்ட பாலனை மீட்ட அற்புதத்தை நிகழ்த்திய அருளாளர் இவர்களில் யார்?

அ) திருநாவுக்கரசர்

ஆ) திருஞானசம்பந்தர்

இ) சுந்தரர்

ஈ) மாணிக்கவாசகர்.

வினா 6:

''பெரிய புராணம்'' என்று சிறப்பிக்கப் படுவது இவற்றில் எது?

அ) திருத்தொண்டர் மாக்கதை

ஆ) கந்தபுராணம்

இ) கம்ப இராமாயணம்

ஈ) வில்லிபாரதம்.

வினா 7:

''முதல் ஆழ்வார்கள்'' என்ற வரிசையில் சேராத ஆழ்வார் இவர்களில் யார்?

அ) பொய்கையார்

ஆ) திருமழிசையார்

இ) பூதத்தார்

ஈ) பேயார்.

வினா 8:

''படியாய்க் கிடந்து உன் பவளவாய்காண் பேனே'' என்று பாடிய அருளாளர் இவர்களில் யார்?

அ) பெரியாழ்வார்

ஆ) திருமங்கை ஆழ்வார்

இ) குலசேகராழ்வார்

ஈ) தொண்டரடிப் பொடி ஆழ்வார்.

வினா 9:

லோக சாரங்கர் தோளில் ஏறி அரங்கனுடன் ஐக்கியமானவர் இவர்களில் யார்?

அ) மதுரகவி ஆழ்வார்

ஆ) இராமானுஜர்

இ) நாதமுனிகள்

ஈ) திருப்பாணாழ்வார்.

வினா 10:

''சங்கத்தமிழ் மாலை'' என்று சிறப்பிக்கப் பெறும் நூல் இவற்றில் எது?

அ) பத்துப் பாட்டு

ஆ) எட்டுத் தொகை

இ) திருக்குறள்

ஈ) திருப்பாவை.

சரியான விடை

வினா 1: ஈ. அப்பரடிகள்

வினா 2: ஈ. பட்டினத்தார்

வினா 3: இ. திருமூலர்

வினா 4: ஈ. நக்கீரர்

வினா 5: இ. சுந்தரர்

வினா 6: அ. திருத்தொண்டர் மாக்கதை

வினா 7: ஆ. திருமழிசையார்

வினா 8: இ. குலசேகராழ்வார்

வினா 9: ஈ. திருப்பாணாழ்வார்

வினா 10: ஈ. திருப்பாவை.

★★★




சென்னை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் வாகன மண்டபம் திறப்புவிழா, கோசாலை திறப்பு விழா மற்றும் வழிபடுவோர் குடிநீர்த் தொட்டி திறப்புவிழா ஆகியவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இவ்விழாவில் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்களும், சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., சென்னை உதவி ஆணையாளர் திருமிகு அ. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். ஆகியோர் இவ்விழாவில் பங்குபெற்றுச் சிறப்பித்தனர். திருக்கோயில் நிர்வாக அலுவலர் திரு அ. தனபாலன் அவர்களும், அறங்காவலர் குழுத்தலைவர் கொ.சி. நடராசன் அவர்களும், அறங்காவலர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.






வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.